எச்சரிக்கை! எச்சரிக்கை!

ஆபத்து இந்தியாவிற்குள் வரப்போகிறது ஜாக்கிரதை!

சகோதரி வி .மரியா (எ) மிரியாம்

பதிப்பாசிரியர்-எஸ்-தாயப்பன்

ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதைக்
காதுள்ளவன் கேட்கக்கடவன்;ஜெயங்கொள்ளுகிறவனெவனோ
அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற
ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன்.

வெளி 2:7

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்."

ஆமோஸ் 3:7

தேவ பிள்ளைகளே உங்கள் சகோதரியான
எனக்கு பைபிளின் இரத்தின சுருக்கமும் இயேசுவின்
இரண்டாம் வருகையும் என்ற புத்தகத்தை
வெளியிட தேவன் கிருபை கொடுத்தார்.
அநேக ஊழியக்காரருக்கு இந்த புத்தகம் அனுப்பிவைக்கப்
பட்டது அந்த புத்தகத்தை படித்த பிறகு
வல்லமையாய் ஊழியம் செய்யும் சகோதரர்கள் வாழ்த்துரை
அனுப்பினார்கள் அவர்களில் சிலர்.

சகோதரர். சாம் ஜெபத்துரை. அவர்கள்
சகோதரி . ஸ்டெல்லா தினகரன், அவர்கள்
சகோதரர். மோகன் சி.லாசரஸ் அவர்கள் .

பதிப்பாசிரியர்-எஸ்.தாயப்பன்

எச்சரிக்கை ! எச்சரிக்கை ! ஆபத்து '666' வரப்போகிறது ஜாக்கிரதை

முதல் பதிப்பு : ஜூன் 2013 - 5000 பிரதிகள

புத்தகங்கள் கிடைக்குமிடம் (சென்னை)

புத்தகப் பதிப்பாளரும் & வெளியிடுபவரும் :

எஸ். தாயப்பன்

12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1,
சேலையூர் (அஞ்சல்), சென்னை 600 073.
தொலைபேசி : (044) 22234526

சகோதரர் எஸ். *தாயப்பன்*, ஐயா அவர்கள் முழு முயற்சி எடுத்து எச்சரிக்கை! எச்சரிக்கை ! ஆபத்து '666' இந்தியாவிற்குள் வரப்போகிறது ஜாக்கிரதை என்ற புத்தகத்தை வெளியிட்டார். கர்த்தருடைய வருகைக்கு முன்பே எல்லா சபை மக்களுக்கும் எச்சரிக்கை வசனங்கள் போய் சேர வேண்டும். அப்போது தான் எல்லா தேவப் பிள்ளைகளும் ஆயத்தமாக முடியும் என்பதை கருத்தில் கொண்டு, இந்த ஊழியத்தில் என்னோடு இணைந்து எனக்கு உதவி செய்தார். அக்காலத்தில் பவுல் மிகுந்த தைரியத்துடனே தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து பேசினார். (அப்போஸ்தலர் 28:31) அது போல சகோதரர் எஸ்.தாயப்பன் ஐயா அவர்கள் ஆசிரியராகிய நான் எழுதிய இந்த 2-ஆம் புத்தகத்தை படித்தவுடன் பயப்படாமல் நான் இந்த புத்தகத்தை வெளியிட உங்களுக்கு உதவி செய்கிறேன் என்றார். கட்டாயம் எல்லா சபை மக்கள் அனைவருக்கும் இப்புத்தகம் கிடைக்கவேண்டும் என்று என்னை உற்சாகம் ஊட்டினார்.

எனவே ஆண்டவரின் வருகைக்கு முன்பே முத்திரையாகிய பயோசிப் வரும் என்பதைக் குறித்து திட்டமும் தெளிவுமாக வேத வசன ஆதாரத்துடன் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையால், ஐயா அவர்கள் முதிர் வயதிலும் வாலிபப் பிள்ளையைப் போல ஓடி ஓடி கர்த்தருக்காக ஊழியம் செய்துவருகிறார். எனவே ஆசிரியராகிய நானும் என் குடும்பத்தாரின் சார்பில் அவரை வாழ்த்துகிறேன்.

தேவன் தாமே அவரையும், அவர் குடும்பத்தையும் ஆசீர்வதித்து பாதுகாப்பாராக.

ஆசிரியர்
சகோதரி **வி. மரியா (எ) மிரியாம்**
கைபேசி : 9688748968
e-mail : rathinasurukam@gmail.com

எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
ஆபத்து !
‘666’
வரப்போகிறது !
ஜாக்கிரதை!

(பயோசிப் மூலம் ஒரு அவல நிலை ஏற்படப் போகிறது)

குறிப்பு :-

அனைத்து திருச்சபை மக்களுக்கும் தேவன் ஒருவராய் இருப்பதால் அவர் கொடுக்கப்பட்ட இக் கட்டளையை பரலோகம் செல்ல விரும்பும், எல்லா தேவப் பிள்ளைகளும் கடைபிடித்தே ஆகவேண்டும். எனவே முதலாவது பயோசிப் காலத்தில் பயப்படவே கூடாது. யாராவது நம்மை (அல்லது) நம் சபையை ஏதாவது செய்துவிடுவார்களோ என்று பயந்தால், பயப்படுகிறவர்கள் பரலோகம் இராஜ்யம் செல்ல முடியாது என்று வெளிப்பாடு.21:8 சொல்கிறது. எனவே பயம் இல்லாமல் தை ரியத்தோடு இருந்து இந்த முத்திரையை பதியவே கூடாது என்று உயிர் உள்ள நாள் வரை உறுதியுடனும், விசுவாசத்துடனும் ஒவ்வொரு தேவப்பிள்ளையும் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

நன்கொடை : ரூ. 10/-

ANTANTULLA APPAM TRUST

(A Non-Profitable

50, Railway Station Road, Kodambakkam,
Chennai-600 024, Tamil Nadu, INDIA.

Phone: 044-24835299, 24840407, 24803932, 55391925.
Fax: 044-24803933/ E-mail: appam@appamonline.com
jsamjeb@appamonline.com
appam@vsnl.com

J. Sam Jebadurai,
Evangelist & Managing Trustee

Date 7-04-12

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரி மரியா அவர்களுக்கு.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

நீங்கள் அன்போடு அனுப்பிய புத்தகம் கிடைத்தது. "இயேசுவின் இரண்டாம் வருகையும், பைபிளின் இரத்தின சுருக்கமும்" என்ற புத்தகமும், இன்னும் ஏராளமான தகவல்களையும், ஏராளமான செய்தி குறிப்புகளையும் இணைத்திருக்கிறீர்கள். நிச்சயமாகவே அது தமிழ் மக்கள் மத்தியிலே ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை கொண்டு வரும். உங்கள் மூலமாய் அநேக புத்தகங்கள் வெளிவர வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு நான் உங்களுக்கு "தெய்வீக சுகமும், ஆரோக்கியமும்" என்ற புத்தகத்தை அனுப்பியிருக்கிறேன். கர்த்தர் அந்த புத்தகத்தை உங்களுக்கு ஆசீர்வதித்துத் தருவாராக.

தொடர்ந்து உங்களுக்காய் ஜெபிக்கிறேன். எனக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய கிருபை எப்பொழுதும் உங்களோடிருப்பதாக.

"சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்" (உபா. 7:14).

அன்பும் ஜெபமும்

கிறிஸ்துவின் மகிமையான பணியில்,

(சகோ. ஜே.சாம் ஜெபத்துரை)

Lord will Give You The Desire of Your Heart' Psalms 37:4

JESUS REDEEMS

Nalumavadi - 628 211, Thoothukudi Dt. Tamilnadu, India

Mohan C. Lazarus

5 · 07 · 12

Sis. Maria @ Miriam,
Puthucherry.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரி அவர்களுக்கு அவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள் !

இக்கடிதம் மூலமாக உங்களோடு தொடர்பு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் கடிதம் மற்றும் நீங்கள் அனுப்பியிருந்த பைபிளின் இரத்தின சுருக்கமும் இயேசுவின் இரண்டாம் வருகையும் என்ற புத்தகம் கிடைக்கப் பெற்று வாசித்து விபரம் அறிந்தேன். கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கிற வெளிப்பாடுகளுக்காக அவரைத் துதிக்கிறேன்.

இப்புத்தகத்தை வாசிக்கிற ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிக்கவும், ஒவ்வொருவதும் தேவனுடைய வருகைக்கு ஆயத்தப்படவும், மற்றவர்களை ஆயத்தப்படுத்தவும் தேவன் கிருபை கொடுக்கும்படியாக அதிகமாக ஜெபிக்கிறேன். தேவனாகிய கர்த்தர் தாமே உங்களோடிருந்து ஆசீர்வதிப்பார். உங்கள் அன்பிற்கு நன்றி.

உங்களுக்காக, குடும்பத்திற்காக, நீங்கள் கர்த்தருக்காக படுகிற எல்லா பிரயாசங்களையும் அவர் வாய்க்கப்பண்ணும்படியாக நான் அதிகமாக ஜெபித்திருக்கிறேன். சகலவித ஆசீர்வாதத்திற்கும் ஊற்றும், காரணருமாகிய கர்த்தர் உங்களையும், குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார். தொடர்ந்து அதிக ஜெபத்தோடு முன்னேறுங்கள். ஊழியத்தின் பாதையில் தந்திருக்கிற தரிசனங்களை நிறைவேற்றுவார். சகல காரியங்களிலும் போதுமானவராக இருந்து நடத்துவார்.

“நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய்.” *(1சாமு.26 : 25)*

என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

அன்புடனும், ஜெபத்துடனும்,

உங்கள் சகோதரன்,

Mohan C L

(மோகன் சி. லாசரஸ்)

Tel : 04639 - 235 305 / 235 705 Fax : 04639 - 235 415
Email : info@jesusredeems.com Visit us : http://www.jesusredeems.com/

[illegible]

For 24 hours Prayer help Dial : 04639 - 235 315

Prayer Tower

(A Unit of Jesus Calls)

(A Registered & Religious Trust)

Jesus Calls — Praying for the World

Address : # 72, Rajaji Salai, Chennai 600 001, India
Phone Office : 91-44-2345 6677
Fax : 91-44-2525 1414
Website : www.jesuscalls.org
Email : stella@jesuscalls.org

Dr. STELLA DHINAKARAN, D.D., Ph.D.,
Founder

February 26, 2013
Partner Code: 929385
EPG

Mrs. MARIA @ MALLIGA VINOBHA
C/O MR. WILLIAMS
7-A, 1ST FLOOR, MADATHU STREET
CONVENT STREET
NELLITHOPPU POST
PONDICHERRY 605005

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிக்கு,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

உங்கள் அன்பின் கடிதம் கிடைத்தது. நீங்கள் "இயேசுவின் இரண்டாம் வருகை" என்ற புத்தகத்தை எனக்கு அனுப்பி தந்தமைக்காக அதிக நன்றி கூறுகிறேன். கர்த்தர் உங்களை வழி நடத்தினபடியே எழுதிய புத்தகத்திற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தர் கொடுத்த ஊழியங்களிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் விளங்க நான் கருத்தாய் ஜெபிக்கிறேன் (சங்கீதம் 104:4).

நீங்கள் எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஏறெடுத்து வரும் ஜெபங்களுக்கு நன்றி.

நீங்கள் ஒவ்வொரு மாதமும் 10 சகோதரிகளாகக் கூடி எஸ்தர் ஜெபக்குழுவை நடத்தி வருவதைக் குறித்து அதிக சந்தோஷம். ஆனால் அதைப் பற்றியதான எந்த கடிதமும் எங்களுக்கு வரவில்லை. எனினும், இத்துடன் நான் அனுப்பியிருக்கும் ஜெபக்குறிப்புகளுக்காக வாரம் இரண்டு மணிநேரம் நீங்கள் குறிப்பிட்டுள்ளபடியே, 10-க்கும் அதிகமான சகோதரிகளாகக் கூடி பாரத்தோடு ஜெபியுங்கள்.

எஸ்தர் ஜெபக்குழு கூட்டம் நடந்து முடிந்த அடுத்த நாளே இத்துடன் இணைத்துள்ள எஸ்தர் ஜெபக்குழு கூட்ட அறிக்கை படிவத்தை நிரப்பி அனுப்பி வையுங்கள். உங்கள் அறிக்கை கிடைத்த பின்பே, உங்கள் குழுவை "இயேசு அழைக்கிறார்" எஸ்தர் ஜெபக்குழுக்களோடு சேர்த்து, எஸ்தர் ஜெபக்குழு எண் கொடுத்து, அடுத்த மாதத்திற்கான ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைப்பேன் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகுந்த அன்புடனும், ஜெபத்துடனும்,

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி,

S. [signature]

(திருமதி எஸ். தினகரன்)

பொருளடக்கம்

வ.எண்.	தலைப்பு	பக்க எண்
1)	ஆசிரியரின் சாட்சியும் ஆலோசனையும்	7
2)	இந்தியாவிற்குள் வரப்போகும் பயோசிப்	15
3)	இயற்கை அழிவுகளும் பயோசிப் அணிந்தவர்களும்	18
4)	பயோசிப், 666 என்ற எண்ணாக மறுரூபமாகிறது	25
5)	பயோசிப்பின் ஆட்சிக் காலம் குறைந்த நாட்களே	27
6)	இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் பயோசிப் அழிவும்	29
7)	பயோசிப் காலத்தில் ஒரு தேவப்பிள்ளை வாழவேண்டிய முறை	31
8)	மணவாளன் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட விரும்பும் மணவாட்டியே ஆயத்தப்பட்டு விட்டாயா ?	35
9)	வருகைக்கு பிறகு கைவிடப்பட்ட தேவப்பிள்ளைகள் ஆயத்தமாகும் முறை	40
10)	ஆசிரியரின் இறுதி உரையும் ஜெபமும்	42

வி. மரியா [எ]
மிரியாம்

1) ஆசிரியரின் சாட்சியும் ஆலோசனைகளும்

அன்பான தேவ பிள்ளைகளே !

என் பெயர் மரியா (எ) மிரியாம். நான் உங்களிடத்தில் கடந்த வருடம் ''பைபிளின் இரத்தின சுருக்கமும் இயேசுவின் இரண்டாம் வருகையும்'' என்ற புத்தகத்தின் மூலம் அறிமுகம் ஆனேன். அப்புத்தகத்தில் அநேக தேவ செய்திகளையும், வேதத்தில் உள்ள இரகசியங்களையும், ஆவியானவர் வெளிப்படுத்தியதைப் பகிர்ந்து கொண்டேன்.

அதற்கு தேவன் கிருபை கொடுத்தார். அந்த் புத்தகம் அநேக ஊழியகாரர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர்களில் ஒரு சிலர் படித்து நன்றாக இருந்தது என்று செல்போன் மூலமாகவும், கடிதத்தின் வாயிலாகவும் வாழ்த்து கூறினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆவியானவரும் என்னை வாழ்த்தினார். கடந்த 3-12-2012 அன்று மாலை 6-30 மணியளவில் நான் நடத்தும் டியூஷன் பிள்ளைகளுக்கு வேத சத்தியம் சொல்ல ஆயத்தப்படுத்தினேன். அப்போது திடீரென்று என் ஆவியில் நீ தேவ பிள்ளை என்றும், உன் ஜெபத்திற்கு வல்லமை உண்டு என்ற மெல்லிய சத்தமும், யாரோ சொல்வது போலிருந்தது.

உடனே எனக்கு ஒரே மகிழ்ச்சி. ஆண்டவருக்கு நன்றி சொன்னேன். பிறகு ஆண்டவரிடத்தில் இந்த வார்த்தை உண்மையென்றால் உம்முடைய வேத வசனம் மூலம் உறுதிபடுத்துங்கள் என்று ஜெபித்தேன். அனுதினமும்

அதிகாலையில் ஜெபிக்கும்போது ஏதாவது ஒரு அதிகாரம் பைபிளில் படிக்கும் பழக்கம் இருந்து வருகின்றது. அதன்படி ஆவியானவர் பேசிய மறுநாளுக்கு பிறகு ஜெபம் முடிந்து வேதப்பகுதியை எடுத்து வாசித்தேன். ரோமர் 8ம் அதிகாரம் கிடைத்தது. அந்த அதிகார வசனங்களை படித்துக் கொண்டு வரும்போது ரோ.8:16ம் வசனம் நேற்றுமாலை ஆவியானவர் பேசிய வார்த்தையைப் போலவே இருந்தது. **"நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்".** இந்த வசனத்தை படித்து பின்பு ஆவியானவர் தாமே, பேசிய வார்த்தை எவ்வளவு உண்மையுள்ளது என்பதை புரிந்து கொண்டேன்.

ஆவியானவர் ஏன் என்னை தேற்றினார் என்பதை யோசித்தேன். ஒரு சிலர் நான் எழுதிய முதல் புத்தகத்தில் உள்ள அனைத்து கட்டளைகளையும் கடைபிடிக்க தேவையில்லை என்று கூறினார்கள். பரிசுத்தத்தை கடைபிடிக்க முடியாது என்று கூறி வேதனைப்படுத்தினர். ஆவியானவர் எதற்காக தேற்றினார் என்பதை இதன் பின்பு தான் தெரிந்து கொண்டேன். அதன்பின் சில ஊழியர்கள் போன் மூலமாக வாழ்த்து கூறினார்கள்.

குறிப்பாக சீனியர் பாஸ்டர் பிரதாப்சிங் (திரித்துவ பூரண சபை, சென்னை) அவர்கள் முதல் புத்தகத்தை உடனே படித்து முடித்தேன் என்றும், முடித்த நேரம் இரவு 11-00 மணிக்கு மேல் ஆகிவிட்டது என்று மறுநாள் காலை 6-00 மணியளவில் வாழ்த்துக் கூறி ஜெபம் செய்தார். சபையில் ஒரு முறை அறிமுகப்படுத்துவதாக கூறினார். மற்றும் சில ஊழியர்கள் வீட்டுக்கு வந்து வாழ்த்துக்களைக் கூறினார்கள். சிலர் கடிதம் மூலம் வாழ்த்துச் செய்தி அனுப்பினார்கள். அதனை இப்புத்தகத்தில் இணைத்து உள்ளேன். நான் எழுதியுள்ள இரண்டாவது புத்தக தலைப்பு

"எச்சரிக்கை ! எச்சரிக்கை ! ஆபத்து '666' வரப்போகிறது ஜாக்கிரதை" இத்தலைப்பை சகோதரர் எஸ்.தாயப்பன் (சுவிஷேசகர்) அவர்கள் தேர்வு செய்து எழுதி அனுப்பினார். முதல் புத்தகம் வெளியிடுவதற்கும், ஐயா, அவர்கள் தகப்பன் ஸ்தானத்தில் இருந்து எனக்கு உதவி செய்தார். இந்த இரண்டாம் புத்தகம் எழுதிய நோக்கம் தேவ பிள்ளைகள் அநேகர் '666' என்ற எண் இந்தியாவிற்குள் வருவதற்கு இன்னும் அநேக வருடங்கள் இருக்கிறது என்று கவலையில்லாமல் இருக்கிறார்கள். தேவ பிள்ளையாகிய நீங்கள் ஒரு ரகசியத்தை தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு குழந்தை தாயின் கருவில் உருவானவுடன் வளர்ந்து கொண்டே வரும். பிறகு பிறக்கவேண்டிய நேரம், தேவ சித்தம் இவற்றின்படி பிறக்குமல்லவா, அதேபோல் அது மனிதனின் இலக்கமாய் இருக்கிறது. அதனுடைய இலக்கம் 666 **(வெளிப்பாடு.13:18)** என்ற வேத வசனம் பயோசிப் வடிவத்தில் இந்தியாவின் கருப்பைக்குள் உருவாகி வள்ர்ந்து கொண்டேயிருக்கிறது. சீக்கிரமாக இந்தியாவில் இந்த வேத வசனம் பிறந்து விடும். இதன் இரகசியத்தை அறிந்து அதற்குரிய, ஆதாரத்துடன் இப்புத்தகம், எழுதப்பட்டுள்ளது. ஆண்டவரின் வருகை நாள் மிக மிக சமீபமாய் இருக்கின்றபடியால் நீங்கள் ஆயத்தமாகி விட்டீர்களா ? இல்லையென்றால் செய்யவேண்டிய காரியங்களை கீழே உள்ள செய்தியில் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

தேவ பிள்ளையாகிய நாம் பூமியில் உயிரோடு வாழும் நாள் வரை தேவனுடைய நியாயப் பிரமாண கட்டளைகள் அனைத்தையும் கடைபிடிக்க வேண்டும். கட்டளைகளே நம்மை ஆளுகை செய்கிறது என்று **ரோமர்.7:1** வேத வசனம் சொல்கிறது. நியாயப் பிரமாண கட்டளைகளை கடைபிடிக்கும் ஒருவன் பரிசுத்தமுள்ளவனாக, நீதிமானாக

நன்மை செய்கிறவனாகவும் வாழ முடியும் **ரோமர்.7:12ல்** காண்க. எடுத்துக்காட்டாக வேதத்தில் **லூக்கா. 1:5-6ல்,** சகரியா, எலிசபெத்குடும்பம் கற்பனைகள், நியாயப்பிரமாணங்களை கடைபிடித்து வாழ்ந்தார்கள். அவர்களை பிதா நீதிமான்கள் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே சகோதர, சகோதரிகளே ஆண்டவரின் வருகைக் காலம் சமீபமாய் வந்து விட்டது. நாம் என்னென்ன கட்டளைகளை கடைபிடித்து வாழவேண்டுமென்பதை அறியாமலே இருக்கிறோம். ஒருசில கட்டளைகளை முக்கியமாக கடைபிடித்தால் தான் பரலோகத்தை சுதந்தரிக்க முடியும். **யாத்.20:1-17** வரை உள்ள கட்டளைகளை நிறைவேற்றவே இயேசு இப்பூமிக்கு வந்தார் என்று **மத். 5:17** கூறுகிறது. இக்கட்டளைகளை கடைபிடிப்பவர்களுக்கே, நித்திய ஜீவன் கிடைக்கும் என்று **லூக்கா 18:18-22** கூறுகிறது. இதுவே உங்கள் அன்பு சகோதரியாகிய நான் கொடுக்கும் முதல் ஆலோசனை.

இந்த புத்தகத்தின் மூலம் பரலோகத்தை சுதந்தரிக்கப் போவது ஒன்றே உங்களின் உயிர் மூச்சாக இருக்கவேண்டும். நீங்கள் எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் எங்கள் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். என் உடன்பிறந்த அண்ணன் **A.சுந்தர்ராஜன்** *(சசிகலா ஏஜென்சீஸ், சேலம்)* அவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் பகுதிநேர ஊழியம் செய்து வருகிறார். குறிப்பாக 8 வருடமாக ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளி அன்று முழு இரவு ஜெபம் நடத்தி வருகிறார். அவர் என்னை தேவனுக்குள் வழி நடத்த மிகுந்த சிரமப்பட்டார். இப்போது நானும் என் முழு குடும்பமும் தேவனுடைய பிள்ளைகளாய் வாழ்ந்து வருகிறோம். நானும் என் கணவரும் இணைந்து கர்த்தருடைய வருகைக்கு அநேக ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்த இந்த எச்சரிக்கை ஊழியத்தை செய்து

வருகிறோம். இந்த ஊழியம் செய்வதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இராஜ்யத்தினுடைய சுவிசேஷம் உலகமெங்கும் செல்லவேண்டும் என்று நானும், என் உடன்பிறந்த சகோதரிகளும் மற்றும் ஒரு சில விசுவாச பிள்ளைகளும் கூடி அடிக்கடி ஜெபித்து வருகின்றோம். வீட்டிற்கு விருந்தினராக, பார்வையாளராக யார் வந்தாலும், அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சொல்லி வருகின்றேன். 1-10-2012 விடுமுறையில் வந்த என் இரண்டு மகள்களோடு இரவு குடும்ப விஷயங்களைப் பேசிவிட்டு படுக்கைக்குச் சென்றோம். படுக்கையறையில் நன்றாக தூங்கிவிட்டோம். திடீரென்று இரவு 1-00 மணியளவில் பெரிய சத்தம் கேட்டது. சட்டென்று எழுந்து பார்த்தால் எங்கள் தலைக்கு நேராக ஓடிய மின்விசிறி (ஃபேன்)எங்கள் தலைகளுக்கு நடுவில் வந்து கீழே விழுந்து கிடந்து. மின் விசிறி இறக்கை ஒன்று என் மார்பில் இலேசாகப் பட்டது. ஆனால் இறக்கைகள் வளைந்து விட்டது. எனக்கோ என் இரண்டு பிள்ளைகளுக்கோ ஒன்றுமே ஆகவில்லை. தேவன் தாமே ஒரு தூதனை அனுப்பி அந்நாளில் எங்கள் ஜீவனைப் பாதுகாத்தார். **“நான் என் நாமத்தை பிரஸ்தாப படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்” யாத். 20:24** என்ற வாக்குதத்தம் என் வாழ்வில் அன்று நிறைவேறியது.

எனவே தேவ பிள்ளைகளே, நீங்கள் எதற்கும் கவலைப்படவேண்டாம். உங்கள் கடன் பிரச்சினைகளோ, நோய்களோ, பணப் பற்றாக்குறையோ, பிள்ளைகளின் எதிர்காலத்தை குறித்த கவலையோ, எதைப் பற்றியும் பயப்படவே வேண்டாம். என்ன பிரச்சினையாக இருந்தாலும் நம் இயேசு கிறிஸ்துவை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவரிடம் உங்கள் குறைகளை

சொல்லுங்கள் அவரைத் தவிர நீங்கள் எந்த தெய்வத்தையும் வணங்காமல் இருங்கள். கொடுக்கப்பட்ட கட்டளைகளை கடைப்பிடியுங்கள். அப்போது நீங்கள் **உபாகமம் 28:1-14** வரையில் உள்ள எல்லா ஆசீர்வாதமும், பரலோக ஆசிர்வாதத்தையும் பெற்றுக் கொள்வீர்கள்.

ஊழியப் பாதையில் சாட்சிகள்

தேவ பிள்ளைகளே, என் ஊழியத்தின் மத்தியில் நான் யாருக்காக ஜெபிக்கின்றேனோ, அந்த ஜெபத்திற்கு கர்த்தர் உடனே அநேக முறை பதில் தந்திருக்கிறார். சேலத்தில் மேரி என்ற சகோதரிக்கு பல வருடம் குழந்தையில்லை. வயிற்றில் கைவைத்து ஜெபித்தேன். அவர்கள் இப்போது குழந்தை பாக்கியத்துடன் இருக்கிறார்கள். அந்த குழந்தையின் பெயர் கிருபா. செல்வம் என்ற சகோதரன் 8 மாதமாக பில்லி சூன்ய கட்டுகளால் இடுப்பு வலியோடு வேலை எதுவும் செய்யமுடியாமல் இருந்தார். அவரிடம் சுவிசேஷம் சொல்லி, அவர் தலையில் என் கரத்தை வைத்து ஜெபித்தேன். ஒரு மணி நேரத்திற்குள் முற்றிலும் விடுதலை அடைந்தார். தேவாலயத்திற்கு சென்று தேவ நாமம் மகிமைப்பட அவரே சாட்சி சொன்னார். அரிகரன் என்ற சிறுவன் விளையாடும் போது மூன்றாவது மாடியில் இருந்து சென்டரிங் பலகை விழுந்து மண்டையில் பலத்த அடி. சென்னை மருத்துவமனையில் இருந்து போன் செய்தார்கள். ஜெபித்தேன், ஆண்டவர் அக்குழந்தைக்கு சுகத்தைக் கொடுத்தார். என் வீட்டின் அருகே ஆரோக்கியமரி என்ற 60 வயது தாயாருக்கு, இரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய் காரணமாக மூளை நரம்பு கட் ஆகிவிட்டது. தலையில் கை வைத்து ஜெபித்தேன். பூரண சுகமாகி இன்று வரை வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறாக ஊழியத்தின் பாதையில் அற்புதங்களை தேவ பிள்ளைகளுக்காகவே தேவன் செய்கிறார். ஆனால் அற்புதத்தை மட்டும் பெற்றுக்கொண்டு விக்கிரக

ஆராதனைக்கு மீண்டும் போகிறார்கள். எனவே அற்புத அடையாளங்களைக் காட்டிலும், ஒவ்வொரு பிள்ளையும், பரலோக ராஜ்யத்திற்கு செல்லவேண்டும் என்பதற்காக, ஜெபித்து வருகின்றேன். ஆவியானவரின் வழி நடத்துதலின்படி ஊழியப்பாதை வளர்ந்து கொண்டு வருகிறது. ஆகவே விசுவாச தேவபிள்ளைகளே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நீங்களும் யாருக்காவது ஜெபம் செய்தால், அவர்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இரட்சிப்படைந்த நீங்களும் இயேசுவின் பிள்ளைகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

அனுதினமும் அதிகாலையில் இருட்டோடு எழுந்து, மாற்கு 1:35ன்படி ஜெபம் செய்யவேண்டும். அப்போது தேவன் உங்கள் மீது பிரியப்படுவார். வேதப் புத்தகத்தை (பைபிள்) தினமும் வாசித்து தியானியுங்கள். அதில் என்ன சொல்லப் பட்டிருக்கிறதோ அதன்படி சிந்தித்து செயல்படுங்கள். அநேகர் வேதம் வாசிக்கிறார்கள். அதன்படி நடப்பதில்லை. இப்பூமியில் வாழும் நாம், பரலோகத்தில் வாழ்வது போல, ஒரு தூதரைப் போல் பரிசுத்தமாகவும், உலக பொருட்களினால் அலங்கரிக்காமல், வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் பரலோகத்தை சுதந்தரிக்க முடியும். இயேசு கிறிஸ்துவின் வருகை காலம் மிகவும் சமீபமாய் இருக்கிறது. இதையறிந்து அதற்கேற்றார் போல உங்கள் குடும்ப காரியங்களை, ஆலய வேலைகளை ஒழுங்கு பண்ணுங்கள். நானும் என் குடும்ப காரியங்களை ஒழுங்கு பண்ணிக்கொண்டே வருகிறேன். ஏனென்றால் அவர் வருகைக்கு பிறகு பூமி 7 வருடம் 70 நாள் தான் இருக்கும். அதற்கேற்றார்போல நீங்கள் கையிட்டு செய்யும் எல்லா வேலைகளையும் அமைத்துக் கொள்ளுங்கள். அநேக தேவப்பிள்ளைகள் நேரத்தையும் பணத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை, நான் ஏன் சொல்கிறேன் என்றால் '666' என்கிற முத்திரை

சட்டமாக பதியச் சொல்லிய பிறகே இரகசிய வருகை இருக்கும். அப்போது நீங்கள் எதிர்பார்க்கின்ற சம்பளமோ, காணிக்கைகளோ உங்கள் கரத்திற்கு வராது. ஏனென்றால் முத்திரை காலத்தில் அநேக தேவபிள்ளைகள் அவர்கள் செய்து கொண்டிருக்கும் வேலைகளை இழக்க வேண்டி வரும். இப்போதே பொருட்களின் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. எனவே அவர்கள் குடும்பத்தை நடத்துவதே முத்திரை காலத்தில் மிகவும் சிரமமாக இருக்கும். அந்நாட்களில் **2 கொரிந்தியர்.9:7**-ன்படி தேவபிள்ளைகள் அவரவர்கள் கரங்களில் கிடைக்கும் பணத்தை மட்டும்தான் பிரியமாய் காணிக்கை செலுத்துவார்கள். ஒரு வேளை ஆலயப் பணிகள் நடைபெறுமானால் அப்போது எல்லா வேலைகளும் முடங்கும். உங்களிடத்தில் கடன்காரர்கள் வந்து ஒரு பக்கம் நெருக்குவார்கள். இந்த சூழ்நிலையில் தேவனோடு உறவாட முடியாது. உங்கள் மனது கவலைகளாலும், பாரத்தாலும் நிறைந்திருக்கும்.

எனவே தேவ பிள்ளைகளே ! நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் எச்சரிக்கையாய் இருங்கள். அப்போது தான் உங்களுக்கு வரும் ஆபத்தை எதிர்கொள்ள முடியும். தேவ ஆவியானவரும், உங்களுக்கு உதவி செய்வார். இப்போது அவருடைய சத்தத்திற்கு கீழ்படியாமல், உங்கள் மனம் போன போக்கில் வாழவேண்டாம். அதன்பின்பு கர்த்தாவே, கர்த்தாவே என்று அந்நாளில் கூப்பிட்டீர்கள் என்றால், கர்த்தரும் உங்களுக்கு எவ்வாறு செவி கொடுப்பார் ? ஆகவே ஆசீர்வாத வசனங்களை மட்டும் நம்பி மோசம் போகாதீர்கள். எச்சரிக்கை வார்த்தைகளுக்கும் தயவு செய்து கீழ்படியுங்கள். அப்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். இதுவே என் சாட்சியும் ஆலோசனையுமாகும்.

27 வரப்போகும் பயோசிப்

அருமையான தேவப் பிள்ளைகளே, ‘‘பயோசிப் என்றால் என்ன என்பதை அறிவீர்களா?

பயோசிப் என்பது ஒரு சிறிய அரிசி அளவே உள்ள ஒரு மென்பொருள் புகுத்தப்பட்டு, கணினி மூலம் இயக்கப்படும் ஓர் கருவி. கருவி என்றால் பெரிய அளவில் யூகிக்கவேண்டாம். அது நாம் தினசரி பயன்படுத்தும் அரிசி அளவே இருக்கும். ஒவ்வொரு மனிதனுக்கும் பயோசிப் நெற்றியிலாவது, வலது கையிலாவது போடப்படும் நிலை வெகு சீக்கிரத்தில் இந்தியாவிற்கு வரப்போகிறது. இந்த சிப்பை ஒரு சில நன்மைக்காக கொண்டு வந்தாலும், அதிக அளவில் அதில் ஆபத்து உள்ளதை நாம் அறியவேண்டும். இச்செய்தி எந்த அளவிற்கு உண்மை என்பதை ‘‘புதிய தலைமுறை’’ மூலம் 14 அக்டோபர் 2010 அன்றே செய்தி வெளிவந்துவிட்டது. மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆதாரத்தையும் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். (நன்றி : புதிய தலைமுறை)

உதாரணமாக அரசால் தேடப்படும் ஒரு குற்றவாளி இருக்கும் இடத்தை, அவனது கையில் உள்ள செல்போன் மூலம் கண்டு பிடிக்கின்றனர். எப்படியெனில் நாம் பயன்படுத்தும் செல்போன் Simல் RFID (Radio Frequency Identification) என்னும் ரேடியோ அலைவரிசை தொழில் நுட்பம் அடங்கியுள்ளது. இதற்கு

தினம் ஒரு தகவல் 11-12-2011

உளவாளியை உளவுபார்க்கும் உளவாளி


ஆர்.எப்.ஐ.டி. சிப்.

உளவு நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களை அவர்களுக்கு தெரியாமல் உளவு பார்க்கும் நவீன தொழில் நுட்பம்தான் இப்போது சர்ச்சையை கிளப்பி உள்ளது. அரிசியில் பாதியளவு கொண்ட சின்னதான ஒரு கருவியை உளவு நிறுவன ஊழியர்களின் கையில் உரசிப்போவதுபோல் செலுத்தி விடுவார்கள். அப்புறம் என்ன அந்த ஊழியர் எத்தனை மணிக்கு பாத்ரூம் போகிறார்? எத்தனை மணிக்கு தூங்கப்போகிறார்? யாருடன் பேசுகிறார்? என்ன பேசுகிறார்? என்ற எல்லாவற்றையும் அந்த சின்னக்கருவி கண்காணித்துக்கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு விநாடியும் பதிவாகும் விவரங்கள் அத்தனையும் உடனுக்குடனே கண்ட்ரோல் ரூமுக்கு போய் விடும். இந்த தொழில் நுட்பத்தை ஆர்.எப்.ஐ.டி என்கிறார்கள். அதாவது 'ரேடியோ பிரிக்வன்ஸி ஐடி' என்பதாகும். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற சில நாடுகளில் மட்டும் இந்த சிஸ்டம் அமலில் உள்ளது.

என்னதான் கண்காணிப்பு என்றாலும் இது மனித உரிமை மீறல் என்பதால் இதற்கு உலகம் முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பிவிட்டது. அதனாலேயே மற்ற நாடுகளுக்கும் துறைகளுக்கும் பரவாமல் நின்று விட்டது. பறவைக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் போன்றவை கடுமையாக தாக்கும்போது, [illegible] இருந்து வரும் மிருகங்களில் பறவைகளில் தொற்றிருமி இருக்கிறது என்பதை கண்டறிய [illegible] பயன்படுத்தும் தொழில்நுட்பம் இது. [illegible]

14 அக்டோபர் 2010 "புதிய தலைமுறை" பத்திரிகை

அரசு கொடுக்கிறது 'ஆதாரம்'

ஆனால், அதைக் கொண்டு உங்களைக் கண்காணிக்கவும் செய்யலாம்

"புதிய தலைமுறை" 14 அக்டோபர் 2010

RFID-Tag-என்று பெயர். இந்த Tag விண்வெளியில் சுற்றித்திரியும் GPS செயற்கைகோளுடன் தொடர்பு நிலையிலேயே இருக்கும். இதன் மூலம் மனிதன் ஒரு எந்த தூர தேசத்திற்கு சென்றாலும் அவனை கண்காணிக்க முடிகிறது. இதன் மூலமே அநேக குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள் என்பதை கேள்விப்படுகிறீர்கள் அல்லவா ? இதே RFID Tag பயன்படுத்தப்பட்ட "தடவியல் இயந்திரம்" அதாவது "டிராக்கிங் டிவைஸ்"ஐ வெளிநாடுகளிலும் இந்தியாவிலும் முதலில் விலங்குகளுக்கு பொறுத்தி அவற்றின் வாழ்க்கை முறையையும், அவற்றின் நடவடிக்கைகளையும் கண்காணித்தனர். ஆனால் இந்த RFID போடப்பட்ட விலங்குகளின் வாழ்வுக் காலம் மற்ற விலங்குகளைவிட குறைவாகவே உள்ளது என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (நன்றி : தினத்தந்தி). காரணம் (ரேடியேஷன்), இந்த ரேடியோ அலைவரிசையின் மூலம் விலங்குகளின் உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு விரைவில் அவைகள் இறக்கின்றன. இதேபோல இந்த RFIDயின் பரிணாம

16 இலக்க எண்

இதுகுறித்து நந்தன் நிலேகாணி கூறியதாவது:-

2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது, ஒவ்வொரு குடிமகனின் 10 விரல் ரேகைகளும் பதிவு செய்யப்படும். அல்லது அதற்குப் பதிலாக, கண்ணின் கருவிழியை படமாக எடுக்கும் யோசனையும் பரிசீலனையில் உள்ளது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் அடையாள எண் கொடுக்க மத்திய அரசு திட்டம் வகுத்துள்ளது. இது 16 இலக்கங்கள் கொண்ட எண்ணாக இருக்கும். இந்த திட்டத்துக்காகவே, அனைவரது விரல் ரேகைகளும் பதிவு செய்யப்படுகின்றன. அடையாள எண் வழங்கும் திட்டம், இன்னும் 18 முதல் 24 மாதங்களில் தொடங்கி விடும். அதையடுத்த 4 ஆண்டுகளில் 60 கோடி பேருக்கு அடையாள எண் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

2011-ம் ஆண்டு 17/01/2009

..கள்தொகை கணக்கெடுப்பின்போது ..கைரேகையும் பதிவு செய்யப்படும்

..வொருவருக்கும் அடையாள எண் வழங்கும் திட்டத்துக்காக புதிய ஏற்பாடு

வளர்ச்சியின் அடுத்த கட்டமாக உருவாக்கப்பட்டதே இந்த பயோசிப் (Bio Chip).

இதன் வடிவம் எப்படி அமைக்கப்பட்டுள்ளது என்றால் அரிசி அளவே உள்ள இந்த (Bio Chip) பயோசிப் மனித உடலில் எளிதில் பொறுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை நெற்றியிலோ அல்லது வலது கையிலோ பதிய வைத்து ஒவ்வொரு குடிமகனுக்கும் 16 இலக்கம் கொண்ட ஒரு தனித்துவ அடையாளப் பதிவெண் கொடுக்கப்படும். இந்த பயோசிப் (Bio Chip)ல் அடங்கியுள்ள தகவல் என்னவென்றால், நம்மிடம் சேகரிக்கப்பட்ட ஆவண அடையாளங்களும், நமது கருவிழி மற்றும், பத்துவிரல்களின் ரேகைகளும் மேலும் பல தகவல்களும் இதனுள் அடங்கியிருக்கும். இந்த பயோசிப்பை (Bio Chip) செயற்கைகோளுடன் தொடர்புபடுத்தி இதை அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். இதன் மூலம் மனிதன் அரசு கட்டுப்பாட்டில் செயல்படப் போகிறான். இதன் முதற்கட்டமாக ஆதார் அடையாள அட்டை தீவிரமாகியுள்ளது. வளரும் நாடான

இந்தியாவிற்கு இந்த ''ஆதார் அட்டையே'' போதுமானது. ''அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு'' என்னும் பழமொழிக்கு ஏற்றார் போல, ஆதார் அட்டைக்கு பதிலாக பயோசிப்பை மனிதனுக்கு போட்டு, எந்த நேரத்திலும் செயற்கை கோளுடன் நாம் தொடர்பிலேயே இருக்கும்படியான திட்டங்கள் ஆயத்தமாகி கொண்டிருக்கிறது. இப்படியாக பயோசிப் இந்தியாவிற்குள் வருவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் ஆயத்தமாகிவிட்டது.

3] இயற்கை அழிவுகளும் பயோசிப் அணிந்தவர்களும்

தேவப்பிள்ளைகளே, நம் இந்தியாவிலும், மற்ற அனைத்து நாடுகளிலும், சூரியனிலிருந்து வரும் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இதன் மூலம் நாட்டில் வறட்சி பஞ்சங்கள், தண்ணீர் பற்றாக்குறை காணப்படுகிறது. இந்நிலையில் செய்தி தாளின் மூலம் வரும் செய்திகளை படித்துப் பார்த்தால், இயற்கையாகிய சூரியன், நட்சத்திரங்கள் மூலம் இன்னும் இப்பூமிக்கு ஆபத்து அதிகமாக போகிறது என்பது உறுதியாகிறது. நீங்களே கீழே வரும் செய்தித் தாளின் ஆதாரத்தை படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

சூரியனில் இருந்து பூமியை நோக்கி காந்தப்புயல் வருகிறது

விமான போக்குவரத்து-செயற்கை கோள்களுக்கு பாதிப்பு ஏற்படுமா?

சூரியனில் இருந்து காந்தப்புயல் வெளியேறும் காட்சி

சூரியனிலிருந்து காந்தப் புயல் வருகிறது என்ற தகவல் 25-01-2012 அன்றே தினத்தந்தி நாளிதழில் வந்துவிட்டது.

2013-ம் ஆண்டில் பூமியே முடங்கும் அபாயம்

சூரியனில் வருகிற 2013-ம் ஆண்டில் பிரளயம் ஏற்படப் போகிறது. அப்போது ஏற்படும் ராட்சத வெடிப்புகளால் நெருப்பு கோளங்கள் வெளிப்பட்டு பூமியை பாதிப்படைய செய்யப்போகிறது. இது போன்ற வெடிப்பு சூரியனில் 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படுவது வழக்கம்.

இப்போது ஏற்படப்போகும் இந்த பிரளயத்தால் விண்வெளியில் சுற்றிவரும் செயற்கைக்கோள்கள் சேதம் அடையும். இதனால் மொபைல் போன் மூலமான தகவல் தொடர்பு துண்டிக்கப்படும். மின்கம்பங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இருள் சூழ்ந்து கொள்ளும். இணையதளங்கள் பழுதாகி விடும். விமானங்கள் பறக்க முடியாத நிலைமை ஏற்படும்.

இது பற்றி இங்கிலாந்து நாட்டு ராணுவ மந்திரி லியாம் பாக்ஸ் எச்சரித்தார். சூரியனில் இப்படி ஒரு பிரளயம் ஏற்பட்டால், பூமியில் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு சேதம் ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

சூரியனிலிருந்து இலட்சக்கணக்கான மின் அழுத்தம் கொண்ட கதிர்வீச்சுகள் பூமியை, கடுமையாக தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இந்தியாவிற்குள் வரப்போகிற சட்டத்திட்டத்தின்படி ஒவ்வொரு மனிதனும், பயோசிப் பொருத்திக் கொண்டால், உடனுக்குடன் அதனுடைய வேலை ஆரம்பமாகிவிடும். அப்போது பயோசிப் கதிர்வீச்சுகளை கிரகிக்கும் பொருளாகவும், கதிர் அலைகள் மூலம் செயற்கைகோளுக்கு தகவல் அனுப்பும் கருவியாகவும், உள்ளதால் இதன் மூலம் மனித உடலில் பல்வேறு தாக்குங்கள் ஏற்படும். உடல் ஊனம், உடல் உள்உறுப்புகள் பாதிப்பு நுரையீரல் பாதிப்பு, இருதய பாதிப்பு, இரத்தப் புற்றுநோய் போன்றவை வரவாய்ப்புள்ளது. மேலும் ஒரு தகவல் : 2013ஆம் ஆண்டில் ''பூமியே முடங்கும் அபாயம்'' என்ற தலைப்பில் ஒரு செய்தியும் வெளிவந்தது.

செப்டம்பர் 23ம் தேதி 2010 ஆண்டில் தினத்தந்தி நாளிதழில் வெளியான செய்தி : சூரியனில் பிரளயம் ஏற்பட்டு ராட்சஷ நெருப்புகோளங்கள் வெளியாகியுள்ளது. மேலும் மற்றொரு தகவல் ''சூடான பிரச்சனை'' என்று 6-12-2009



விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல்

6 லட்சம் பேர் மீது 'அக்னி மழை'

அன்று தினத்தந்தியில் வந்த இச் செய்தியையும் பாருங்கள். பூமியின் மேல் தண்ணீரைப் போல நெருப்பு ஊற்றப்படுகிறது. அடுத்ததலைமுறையே இனி நாம் பார்க்க முடியாது, அந்த அளவிற்கு பூமி வெப்பமாகும் ஆபத்தை எதிர்நோக்கி கொண்டுவருகிறது

பரம்பரை, பரம்பரையாக நேசித்து வந்த இயற்கைமீது. இப்போதெல்லாம் மக்களுக்கு ஒரு வித பீதி.

இன்னும் எப்போது, என்ன நடக்குமோ? என்கிற அச்சம் யாருக்கும் இல்லாமல் இல்லை.

உங்களிடம் சொல்லக் கூடாது என்று ஒரு ரகசியத்தை கட்டிக் காத்து வருகிறார்கள் உலக விஞ்ஞானிகள்.

சொன்னால்... 620 கோடி ஜனங்களின் ஒட்டுமொத்த தூக்கமும் இந்த நிமிஷமே போய் விடும்!

அமெரிக்காவில் உள்ள அரிகோனா பல்கலைக்கழக விணவெளி விஞ்ஞானி 'லாரன்ஸ் பெர் விக்' என்பவர் வானில் உள்ள நட்சத்திரங்கள், மற்றும் எரிகற்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளில் ஒருவர்.

பல ஆண்டுகளாக வானத்தை 'இஞ்ச்' பை இஞ்சாக படம் பிடித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் இவரது கம்ப்யூட்டர் திரையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் 'திடும்' என 'கிங்காங்' மாதிரி ஒரு பிரமாண்ட உருவம்?

அதிர்ந்துதான் போனார் லாரன்ஸ் பெர்விக்.

இத்தகைய அக்னி மழை எங்கே பெய்ய போகிறது? நியூயார்க்கிலா? அல்லது சென்னையிலா? தெரியவில்லை.

வானவெளியில் லட்சக் கணக்கில் எரிகற்களும் நட்சத்திரங்களும் சுற்றிக் கொண்டு தான் இருக்கின்றன. அவை எரிந்து கீழே விழும் பட்சத்தில் பூமியை தொடுவதில்லை.

ஆகவே அச்சம் அவசியமில்லை என்கின்றனர் சில விஞ்ஞானிகள்.

ஒரு வேளை அப்படியும் இருக்கலாம்! கடந்த 1974-ம் ஆண்டில் ஒரு நாள் திடீர் என இதுபோல் எரிகற்கள் மழையாகச் சிதறி பூமியில் விழுந்தன. இதனை அமெரிக்காவில் உள்ள சார்லஸ் கோபட் கோளரங்கம் படம் பிடித்து பார்த்தது. இதில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

பொதுவாக திராட்சை பழம் அல்லது சிறிய ஆப்பிள் சைசில் இருக்கும் இத்தகைய எரிகற்கள் மணிக்கு 70 கி.மீ வேகம் முதல் 26 ஆயிரம் கி.மீ. வேகம் வரை பூமியை நோக்கிப் பாயும்.

ஒரு மணி நேரத்தில் 200 முதல் 5 ஆயிரம்

என்கிற தகவலை பின் அட்டையைப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். ஒரு வேளை இச்செய்திகள் குறிப்பிட்ட ஆண்டுகளில் நடைபெறவில்லை என்றாலும், நிச்சயம் ஒரு சில ஆண்டுகளில் செய்திதாளில் சொல்லப்பட்டபடி சூரியனில் இருந்து வெளிவரும் வெப்பமே பூமியை அழிக்கும். அந்த அளவிற்கு ஆண்டிற்கு ஆண்டு வெப்பம் அதிகரித்துக் கொண்டே போகிறது.

மேலும்"விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல்'' என்ற ஒரு செய்தியை மாலைமலர் 10-6-2009 அன்று வெளியிட்டுள்ளது. அச்செய்தியின் முக்கிய தகவல் : ஒரு மிகப்பெரிய எரி நட்சத்திரம் வயதாகி எரிந்து கொண்டே பூமியை நோக்கி விழுவதற்கு ஆயத்தமாகிறது. நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் ஆராய்ந்ததில் நியூமெக்ஸிகோவைச் சேர்ந்த ''ஜேக் ஹில்ஸ்'' என்ற விஞ்ஞானி, பூமிக்கு மேல் ஆயிரக்கணக்கான எரிகற்கள் சுற்றிக் கொண்டே உள்ளன என்பதையும் அவைகள் எப்பொழுது வேண்டுமானலும் பூமியை நோக்கி விழும் அபாயம் உள்ளது என்றும் கூறியுள்ளார். இந்த சூழ்நிலையில் பயோசிப்பைப் போட்டுக் கொண்டு செயற்கைகோளுடன் போராடி சூரிய கதிர் இயக்கத்திலிருந்து நம்மால் தப்பமுடியுமா? சமீபத்தில் வெளிவந்த இன்னொரு தகவலையும் படித்து தெரிந்து

தினம் ஒரு தகவல்

பூமியின் காந்தவயல்

பூமியைச் சுற்றி ஒரு காந்தவயல் இருக்கிறது. இந்த காந்தவயல் தான் சூரியனில் இருந்து வரும் கதிரியக்கத்தை தடுக்கிறது என்பது நாம் அறிந்தவை தான். ஆனால் வட மற்றும் தென் காந்த துருவங்கள் இருக்கின்றன என்பது நமக்கு தெரியாதது.

இந்த காந்த துருவங்கள் 75 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெயர்வதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுபோன்ற காந்த துருவ இடமாற்றம் நடப்பதற்கு இன்னும் 30 ஆயிரம் ஆண்டுகள் இருக்கின்றன. ஆனால் இந்த காந்த துருவங்கள் எப்போதும் இல்லாத அளவுக்கு ஆண்டுக்கு 20 முதல் 30 கி.மீ வரை வேகமாக நகர்ந்து வருகின்றன. அதனால் இன்னும் 30 ஆயிரம் ஆண்டுகள் கூட காத்திருக்கத் தேவை இல்லை.

இந்த காந்த துருவ இடமாற்றம் வெகு சீக்கிரத்தில் நடக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த துருவ பெயர்தல் காரணமாக காந்தவயலுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும். சுமார் நூறு ஆண்டுகளுக்குள் இந்த காந்தவயல் காணாமல் போய் விட வாய்ப்பு உண்டு. அதனால் அல்ட்ரா வயலட் கதிர்கள் மனிதர்களை தாக்கும். தோலில் பாதிப்புகள் ஏற்படும். அல்ட்ரா வயலட் கதிர்கள் படும் அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விடும். புவியில் மனிதர்கள் மட்டுமல்ல புழு பூச்சிகளும் கூட இருக்காது என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். இது எப்போது வேண்டுமானாலும் நடக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதுபோன்ற காரணங்கள் பல கூறப்பட்டாலும் கூட, சூரியனில் ஏற்படவிருக்கும் ஒரு மிகப்பெரிய சூரியப்புயல் காரணமாக பூமியில் உள்ள அனைத்து மின்சார தொகுப்புகளும் அடியோடு நாசமாகி விடும் என்று அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் கூறுகிறது. இந்த ராட்சத புயல் நூறு ஆண்டுகளுக்குள் நடக்கலாம் அல்லது நூறு நாட்களிலேயே கூட நடக்கலாம் என்றும் நாசா விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

கொள்ளுங்கள். சூரியனிலிருந்து வரும் கதிரியக்கம் இனி அதிகமாகும். காரணம் பூமியை சுற்றியுள்ள, காந்தவயல் காணாமல் போய்விடும். அந்த அளவிற்கு துருவ காற்றுகள் வீசிக் கொண்டிருக்கிறது. இப்படி காந்தவயல் காணாமல் போய்விட்டால், அல்ட்ரா வைலட் கதிர்கள் நேரடியாக மனிதர்களை தாக்கும். இதன் மூலம் தோலில் பாதிப்புகள் ஏற்படும். இக்கதிர்கள் யார் மேல் பட்டாலும் உயிர் வாழ முடியாது. பூமியில் வாழும் எல்லா ஜீவராசிகளும் அழிந்துவிடும். மேலும் சூரியனில் ஏற்படவிருக்கும், ஒரு மிகப் பெரிய சூரியப் புயல், பூமியில் உள்ள அனைத்து மின்சார தொகுப்புகளும், அடியோடு நாசமாகிவிடும் என்று அமெரிக்கா நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் கூறுகிறது. இச்சம்பவம் நடப்பது, 100 நாட்களிலும் நடக்கலாம், 100 ஆண்டுக்குள்ளும் நடக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

தேவப் பிள்ளைகளாகிய நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு உண்மை என்னவென்றால், நம் இந்தியாவில் அனைத்து துறைகளிலும் ஈடுபாடு செலுத்தி இந்தியாவை ஒரு வல்லரசாக்க நாம் முற்படுகிறோம். ஆனால் இந்த பயோசிப்பை நாம் போட்டுக் கொண்டால், இந்தியா முன்னேற்றம் அடைவதற்கு அது உதவியாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதே சமயத்தில் இதில் உள்ள ஆபத்தையும் நாம் உணரவேண்டும். விவசாயம், கல்வித்துறை, மருத்துவம், நீதித்துறை, காவல் மற்றும் கண்காணிப்பு, கணினி தொழில்நுட்பம், அரசியல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் பயோசிப் போடப்படும் கட்டாயத்தில் தள்ளப்படுவதால், இவர்களது உடலில் நேரடியாக கதிர்வீச்சு தாக்கம் ஏற்படும். பயோசிப் போட்டுக்கொண்ட சில நாட்களுக்கு பிறகு நாளுக்கு நாள் இரத்தம் கெட்டுப்போவது, இருதய அழுத்த நோய், நாடி நரம்புகள் தளர்ந்து போவது மற்றும் மனநிலை பாதிப்பு போன்ற தாக்கங்களின் காரணமாக, அந்த துறையைச் சேர்ந்த நபர்கள் மேற்கொண்டு அப்பணிகளை செய்யவே முடியாது.

உதாரணமாக இருதய நோயாளி ஒருவர் தனது சட்டை பாக்கெட்டில் கைபேசி வைத்திருக்கக்கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள். மருத்துவர்களிடம்

ஆலோசித்த பிறகு கிடைத்த பதில் இந்த பயோசிப்பை உடம்பில் பதியவே கூடாது என்றுதான் கூறுகிறார்கள். மருத்துவர்கள் சொல்வது எந்த அளவுக்கு உண்மை என்பதை நாம் யோசித்தாலே புரியும். நாம் பயன்படுத்தும் செல்போன் தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேல் நம்மால் பயன்படுத்த முடியாதென்று நாம் அறிவோம். காரணம் என்னவெனில் செல்போன் செயற்கைகோளுடன் தொடர்புடையதால், நமது காதுபகுதிகள் உஷ்ணமாகி, செவித்திறன் பாதிக்கப்படுகிறது, இதே போல் செயற்கைகோளுடன் தொடர்புடைய பயோசிப்பும், நம் உடலுக்குள் இரவும், பகலும் செயல்பட்டுக்கொண்டே இருக்கும் என்பதை மறக்கக் கூடாது. இதன் பாதிப்பை உணர்ந்த பிறகு அதை நீக்கிட நினைத்தாலும் அது முடியாது. இதை ஒரு முறை உடம்பில் போட்டுக் கொண்டால் வாழ்நாள் முழுதும் அதை நம்மைவிட்டு நீக்க முடியாது. இதை உடலில் இருந்து எடுக்கமுற்பட்டால், பயோசிப்பில் உள்ள கதிர் அலைகள் இரத்தத்தின் மூலம் உடல் முழுக்க பரவி மனிதன் இறக்க நேரிடும்.

''வருமுன் காப்போம்'' என்ற பழமொழிக்கு ஏற்ப எதிர்காலத்தில் இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்கள் குழந்தைகளைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக ''போலியோ சொட்டு மருந்து போட்டு உயிரைக் காக்கும் நம் இந்திய அரசு, இந்த பயோசிப் மூலம் பலகோடி மக்களும் அழிவார்கள் என்பதை சிந்திக்க மறக்கக்கூடாது. தற்போது பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பயோசிப்பானது தயாரிக்கப்பட்டு அமெரிக்கா போன்ற நாடுகளில் பயோசிப் போட உள்ளதாக அதிபர் ஒபாமாவின் செய்தி அறிக்கையில் வெளியாகி உள்ளது (இன்டர்நெட்). இதைத் தொடர்ந்து இந்தியாவிலும் அது வரப்போகிறது. ''தலைக்கு வந்தது தலைப்பாகையோடு சென்றது'' என்பதுபோல இந்திய மக்களின் உயிரை காப்பது நம் தலைவர்கள் கையில் தான் உள்ளது. ஒரு குடும்பத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் ஒரு நபர் இருப்பாரானால், பல ஆயிரம் செலவு செய்தாவது எப்படியாவது அந்த உயிரை காப்பாற்றவே, அவரது தாயும் தகப்பனும் முயற்சி செய்வார்கள். அதுபோல இந்திய தேசத்தை ஆளும் தலைவர்கள் இந்திய மக்களுக்கு தாயும்,

தகப்பனும் ஆவார்கள். எனவே பல ஆயிரம் கோடி செலவு செய்து வைத்திருக்கும் பயோசிப்பை, வேண்டாம் என்று விட்டுவிட்டு 121 கோடி மக்களின் உயிரை காக்க முற்படுவோம்.

பயோசிப்பை ஒவ்வொரு மனிதனுக்கும்போடும் பணி இனி இந்திய தேசத்திற்கு தொடராமல் இருக்க ஒவ்வொரு தேவப் பிள்ளைகளும் ஜெபிப்போம். இந்த பயோசிப் திட்டம் இவ்வுலகத்திற்கு வருவது நம்முடைய தேவனின் சித்தமே. அவரே இத்திட்டத்தை பூமிக்கு அனுமதிக்கிறார். **(வெளிப்பாடு. 17:12,17)** சொல்கிறது. எப்படியெனில் 10 அதிகாரிகள் ஒன்று சேர்ந்து, இத்திட்டத்தை ஏற்படுத்துவதற்கு நம் தேவனே அவர்களுடைய இருதயத்தை ஏவுகிறார். ஏனென்றால் துன்மார்க்கர்கள், இத்திட்டத்தின் மூலம் அறுப்புண்டு போகவேண்டும். ஆனாலும் நம் முன்னோர் காலத்தில் நினிவேபட்டிணம் முழுவதும் அழிப்பேன் என்று சொன்ன தேவன், அப்பட்டிண மக்கள் தேவனுக்கு பயந்து மனம் மாறியதால் அம்மக்கள் முழுவதையும் காப்பாற்றினார். அது போல நம் இந்திய தேச மக்கள் காப்பாற்றப் படவும், உலகம் முழுவதிலும் உள்ள, ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்ட, தேவப் பிள்ளைகள் பரலோக இராஜ்யம் செல்லவும், தேவ பிள்ளைகளாகிய நாம், அனைவரும் ஒருமனமாக கூடி ஜெபிப்போம்.

இதுவரை நீங்கள் படித்த ஒருசில முக்கிய பகுதிகளை மட்டும் "இந்தியாவும் பயோசிப்" என்ற தலைப்பில் ஒரு சிறு செய்தியாக தொகுத்து, வரப்போகும், இயற்கை அழிவுகளை குறித்த செய்திகளையும், ஒரு சில முக்கிய தலைவர்களுக்கு ஆவியானவர் துணையுடன் அனுப்பப்போகிறேன். இப்படி அனுப்பப்படும் செய்தியில் வேத வசனமோ, தேவ செய்தியோ ஒன்றும் இருக்காது. ஏனென்றால் ஆண்டவர் செய்தியை கொடுத்தால், ஏதோ ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் எழுதியுள்ளார்கள் என்று, தட்டிக் கழித்துவிடுவார்கள். ஆசிரியராகிய நான், இச்செய்தியை தலைவர்களுக்கு ஏன் அனுப்புகிறேன் என்றால், தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் மூலம் உபத்திரவம் குறையும் என்ற வசனத்தின்படி, யாராவது ஒரு தேவப்பிள்ளையாவது, தேச தலைவர்களுக்கு இச்செய்தியை

பொருத்திக்கொள்ளும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு முறை இந்த சிப்பை கையில் அல்லது நெற்றியில் பொருத்திக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் அதை வெளியே எடுக்கத் தேவையில்லை.

நீங்கள் ATM மையத்திற்குச் சென்றவுடன் அங்குள்ள

"அரிசி அளவு உள்ள இந்த சிப்பை கைகளில் அல்லது நெற்றியில் பொருத்திக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் அதை வெளியே எடுக்கத் தேவையில்லை"

சென்சர், சிப்பின் உள்ள தகவல்களைக் கொண்டு உங்களை அடையாளம் கண்டு, அதுவே உங்கள் பெயரைக் கூறி ...

போகிறீர்கள், வருகிறீர்கள் என உங்கள் நடமாட்டத்தை அரசு கண்காணித்து

தெரிவித்தால் தான் அவர்கள், பயோசிப்பை அணியாத பிள்ளைகளுக்கு உபத்திரவம் வராமல் இருக்க வழக்காடுவார்கள். பயோசிப்பை குறித்து அவர்களுக்கும் ஒரு பயம் வரும். எனவே அவர்களும் பயோசிப்பை அணிந்து கொள்ளாமல் இருப்பார்கள். புற ஜாதிகளுக்கும் இரட்சிப்பு உண்டு என்று நம் இரட்சராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் அல்லவா ? எனவே இந்த வசனத்தின்படி அநேக பிற இன மக்களும், தேச தலைவர்களும், ஆண்டவர் வருகைக்கு பிறகு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கபடுவார்கள் என்று விசுவாசிக்கிறேன். எனவே இம்முயற்சிகயை ஏறெடுக்கும் எனக்காக தயவு செய்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

4) பயோசிப் '666' என்ற எண்ணாக மறுருபமாகிறது

அன்பான தேவப் பிள்ளைகளே ! மேலே கண்ட இந்தியாவும் பயோசிப் என்கிற அதிர்ச்சிதரும் தகவலை படித்தீர்களா ?

இந்த பயோசிப் ஒவ்வொரு மனிதனுக்கும் நெற்றியிலாவது அல்லது வலது கையிலாவது போட்டு, மனிதர்களின் தகவல்களை அறிய ஏற்பாடுகள் நடந்து கொண்டே இருக்கின்றன

இச்செய்தி 14-10-2020 புதிய தலைமுறை பத்திரிக்கையில், ஆதார் மற்றும் படத்துடன் வெளிவந்துள்ளதையும் பார்த்தீர்கள். நன்றாக கவனித்து பாருங்கள். செவ்வக வடிவில் அடிக்குறியிட்டு காண்பிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதியை படியுங்கள். நம்முடைய பைபிளில் வெளிப்பாடு 13:16-18ல் உள்ள வசனங்கள் மூலம் சொல்லப்பட்டபடியே இது வெளிவருகிறது. மேலும் மூன்று கருத்துக்களை ஆவியானவர் வெளிப்படுத்தி இவ்வுலகத்திற்கு வரப்போகிற பயோசிப்பும், வேதத்தில் உள்ள "666" என்ற எண்ணும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்ற இரகசியத்தை அறிய லூக்கா 8:17ன் படி கிருபை கொடுத்தார். *(வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை; அறியப்பட்டு வெளிக்கு வராத மறைபொருளுமில்லை)* இந்த வசனத்தின்படி நான் அறிந்த இந்த இரகசியத்தை, நீங்களும் அறியும்படி ஆவியானவரே உதவி செய்திருக்கிறார். ஆதலால் நம் ஆண்டவருக்கு கோடி கோடி நன்றி சொல்லுங்கள்.

1) பயோசிப் என்பது பைபிளில் சொல்லப்பட்டபடி சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை குறி (அல்லது) முத்திரையாக அரசாங்கத்தால் போடப்படும் ஒரு அடையாளம். இதைப் போட்டுக் கொண்ட பிறகு ஆதார் எண்ணிற்கு பதிலாக 16 இலக்க எண் கொடுப்பார்கள். இதுவே ஒவ்வொரு மனிதனுக்கும் அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் கடைசி அடையாள குறியீட்டு எண் ஆகும். **(வெளிப்பாடு. 13:16-18)**

2) இந்த பயோசிப் போட்டுக் கொண்டு, இந்த எண்ணை வைத்துக் கொண்டவர்கள் மட்டும் தான் அரசாங்க சலுகைகள் கொண்ட பொருட்களை வாங்கவும், அரசு சம்மந்தப்பட்ட வேலைகளில் ஈடுபட வும் முடியும். பொருட்களை சொத்துக்களை வாங்கவோ, விற்கவோ முடியும்.

3) இந்த பயோசிப்பானது வலது கையில் அல்லது நெற்றியில் போடுவார்கள். பைபிளில் சொல்லப்பட்ட இந்த மூன்று அடையாளங்களுடன் பயோசிப் வெளிவருகிறது. இதுவே '666' என்ற எண்ணாகும். இதை நாம் போட்டுக் கொள்ளவே

கூடாது. ஏனென்றால் **வெளிப்பாடு.14:9-11**ன்படி நெற்றியிலாவது (அ) வலது கையிலாவது முத்திரையாகிய பயோசிப்பை குறியீட்டு கொண்டால், கடவுளின் கோபத்திற்கு நாம் ஆளாகி அக்கினியும், கந்தகமும் உள்ள கடலில் தள்ளப்பட்டு விடுவோம். அதாவது சதா காலமும் நரக ஆக்கினைக்கு ஆளாவோம். மேலும் **வெளிப்பாடு.16:2**ஆம் வசனத்தின்படி இந்த பயோசிப்பை போட்டுக் கொண்டால் இந்த பூமியில் கூட நாம் உயிர் வாழ முடியாத அளவிற்கு துன்பம் தரக் கூடிய பொல்லாத கொடிய புண்கள் அதாவது பெரிய கொப்பளங்கள் வரும்.

எனவே தான் கடவுளின் பிள்ளையாகிய நாம் நம் குடும்பத்திற்கு தேவையான கேஸ், மின்சாரம் போன்ற முக்கியமான குடும்ப தேவைகள், அரசாங்க வேலைகள், பிள்ளைகள் படிப்பு, கல்லூரி படிப்பு இவைகள் எல்லாம் நமக்கு கிடைக்கவில்லையென்றாலும், பயோசிப்பை மட்டும் போடவே கூடாது. நமக்காகத்தான் துன்மார்க்கரை தீங்கு நாட்களில் வைத்து இருப்பதாக கடவுள் சொல்கிறார். எப்படியெனில் என்ன சொன்னாலும் முத்திரையை போட்டுக் கொண்ட அநேகர் அந்நாட்களில் பல உபத்திரவங்களுக்கு மத்தியில் பூமியில் வாழ்வார்கள். அவர்களிடம் நம் பணத்தை கொடுத்து நமக்கு தேவையான மிக முக்கியமான பொருட்களை வாங்கிக் கொள்வோம். இப்படியாக பயோசிப் 666 எண்ணாக மறுரூபமாகிறது என்பதை தெரிந்து கொண்டு ஜாக்கிரதையாய், தேவ ஆவியானவர் துணையுடன் வாழுங்கள்.

5] பயோசிப்பின் ஆட்சிக்காலம் குறைந்த நாட்களே !

அன்பு தேவப்பிள்ளைகளே, இந்த உலக முடிவிற்கு முன்பாக இயேசு கிறிஸ்துவின் வருகை இருக்கும். நாம் அனைவரும் அறிந்த உண்மையும் இதுவே. இப்படியாக இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வருவதற்கு முன்பாக அநேக அடையாளங்களும் அறிகுறிகளும் இப்பூமியில் நடக்கும் என்பதை சீடர்களிடத்தில் இயேசு கூறியுள்ளார். இப்போது இவைகளெல்லாம் (**மத்தேயு. 24, மாற்கு. 13, லூக்கா.**

21) இந்த அதிகாரங்களில் சொல்லப்பட்டபடி நடந்து கொண்டே இருக்கிறது. ஒரு வேளை நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளாக இருப்பீர்களானால் இன்னும் நீங்கள் ஆயத்தப்படுவதற்கு, இயேசுவின் வருகைக்கு அடையாளமாக சொல்லப்பட்ட, அதிகாரங்களை நாள்தோறும் படியுங்கள். அப்போது தான், அவர் வருகைக்கு முன்பாக நடக்கப் போகும், இறுதி சம்பவங்கள் அனைத்தையும், உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியும். இயேசுவின் வருகை நாள், நேரம், நிமிடம், இதைத் தான் ஒருவரும் சொல்ல முடியாது. ஆனால் நடக்கப்போகும் அடையாளங்களை வைத்து அவர் வருகையை கண்டுகொள்ள முடியும் என்று. இயேசுவும் சொல்லியிருக்கிறார்.

இப்படிப்பட்ட அடையாளங்கள் நடக்கும் போதுதான் கடைசியாக நம்முடைய விசுவாசத்தை இந்த பயோசிப் மூலம் உறுதியாக என் பிள்ளைகள் போடாமல் இருக்கிறார்களா ? என்று தேவன் நம்மை சோதித்துப் பார்ப்பார். **1பேதுரு. 1:7**ஆம் வசனம், **வெளிப்பாடு. 3:10, லூக்கா. 21:19, யாக்கோபு. 5:8** பொறுமையைக் குறித்தும், மன உறுதியைக் குறித்தும் நம்பிக்கையை குறித்தும் தெளிவுபடுத்துகிறது. இதில் ஒரு சில வசனங்களைப் பார்ப்போம்.

அதிக விலையேறப் பெற்றதாக இருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும். 1 பேதுரு. 1:7 ல் பார்க்க.

'மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே, விசுவாசத்தை காண்பாரோ' -லூக்கா 18:8.

'கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. 2.தெசலோனிக்கேயர்.2:2-3. இந்த வசனங்களின் மூலம் ஆண்டவர் வருகைக்கு முன்பாக, கட்டாயம் தேவப்பிள்ளைகளின், விசுவாசம் சோதிக்கப்படும் என்பது

உறுதியாகிறது.

இந்த சோதனை எதன் மூலமாக மக்களுக்கு வருகிறது என்றால், அவர் வருகைக்கு முன்பாக முத்திரையாகிய பயோசிப் உலகத்திற்கு சட்டமாக வெளிவரும். இது நம் அனைவருக்கும் ஒரு சோதனை காலம். அப்போது நாம் அனைவரும் பொறுமையாக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவும், நம் ஆத்துமாவை காப்பாற்ற பொறுமையுடன் இருங்கள் என்று **லூக்கா. 21:19ல்** சொல்கிறார். முத்திரையாகிய பயோசிப் பதியவே கூடாது என்று பொறுமையாக வைராக்கியமாக இருக்கிறோமா ? என்று உலகம் முழுவதிலும் உள்ள தேவப் பிள்ளைகளை சோதிக்கிறார். எப்படியெனில், **வெளிப்பாடு.3:10 'பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்கு தப்பும்படி நானும் உன்னை காப்பேன்'.** இந்த வசனத்தின் மூலம் முத்திரை காலம், இரகசிய வருகைக்கு பல மாதங்களுக்கு முன்பு தொடங்கி அவர் வருகை நாள் அன்றே முடிவடைந்துவிடும்.

எப்படியெனில் **திருவெளிப்பாடு 17:12ல்** சொல்லப்பட்டபடி 10 அதிகாரிகள் 1மணி நேரம் அளவு தான் அரசாள்வார்கள். எனவே கொஞ்ச நாட்கள் தான் அதாவது ஓர் ஆண்டு (அ) 2 ஆண்டு மட்டுமே இதற்கு மேல் கட்டாயம் இருக்கவே இருக்காது. **1கொரிந்தியர் 10:13** வசனத்தின்படி, திராணிக்கு மேலாக சோதிக்க மாட்டார். எனவே பயோசிப் ஆட்சிக்காலம் குறைந்த நாட்களே என்பதை தேவப் பிள்ளைகள் அறிந்து தேவனுக்காக அந்நாட்களில் விசுவாசமாய் வாழவேண்டும்.

6] இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் பயோசிப் அழிவும் !

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருக்கும் தேவபிள்ளைகளே, அவர் வருகைக்கு முன்பாக பயோசிப் ஆட்சிக்காலம் வரும் என்பதை ஒரு சில வேத வசனத்தைக் கொண்டு ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தியதை உங்களுக்கு அறிவித்துவிட்டேன். ஏனென்றால் ஒரு சில குடும்ப காரியங்களை நீங்கள் இப்போதே ஒழுங்குபடுத்தவேண்டும், மேலும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ளவேண்டும். மேலே சொன்ன தேவச் செய்தியில் **2தெசலோனிக்கேயர்.2:8ம் வசனத்தில் "அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்."** என்று எழுதியிருக்கிறது. எதை நாசம் பண்ணுவார், எப்படி இயேசு கிறிஸ்து வருவார் என்பதை வேத வசனங்கள் மூலம் தியானிங்கள். **மத்தேயு.24:29-30** என்ன சொல்கிறது என்பதை எடுத்து படியுங்கள். அதில் குறிப்பாய் "அந்நாட்களில் உபத்திரவம் முடிந்தவுடன் சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியை கொடாது இருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்." என்று எழுதியிருக்கிறது. இந்த வசனத்தினுடைய அர்த்தம் உங்களுக்கு புரிகிறது அல்லவா ? இதில் நட்சத்திரங்கள் விழும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நட்சத்திரங்கள் என்றால், ஒரே ஒரு நட்சத்திரத்தை அது குறிக்கவில்லை. பல நட்சத்திரங்களை குறிக்கிறது. இந்த நட்சத்திரங்கள் நாம் பார்ப்பதற்கு, ஒரு பிரகாசத்தை கொடுப்பது போல் இருக்கிறது. ஆனால் அது ஒரு எரிகல். சமீபத்தில் 29-4-13 அன்று தினத்தந்தியில் எரிகற்கள் எப்படி வருகின்றன என்ற தகவல் வெளிவந்தது. அந்த தகவல் பின்அட்டையில் போடப்பட்டுள்ளது. அந்த செய்தி என்னவென்றால் 1908ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதி காலை 7-00 மணிக்கு சைபீரியாவை சேர்ந்த எனிஷி என்ற இடத்தில் மிகப் பெரிய விண் எரிகல் ஒன்று விழுந்தது. இதன் தாக்கம் பெரிய நில அதிர்ச்சி ஏற்பட்டு அடர்ந்த காடுகள் அழிந்துவிட்டன. அதைச் சுற்றி 50 மைல் சுற்றுவெளியில் உள்ள வீடுகள் அனைத்தும் எரிந்து விழுந்தன. இப்படியாக ஒரே ஒரு எரிக்கல் கீழே விழுந்ததில் இவ்வளவு ஆபத்து என்றால்,

ஒன்றுக்கு மேற்பட்ட நட்சத்திரங்கள் அவர் வருகை அன்று பூமியில் விழும். அப்பொழுது எவ்வளவு ஆபத்து வரும். மேலும் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்று வசனத்தில் படித்தோம். அப்படி சத்துவங்கள் அசைக்கப்படும் போது வானில் செயல்பட்டு கொண்டிருக்கும் செயற்கைகோள்கள் எல்லாம் செயலிழந்து விடும். இதன் மூலம் எல்லா மின்சார இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு இணைய தளங்கள், கணிணி இவைகள் எல்லாம் பழுதாகும். இந்நிலையில், பூமியில் செயல்பட்டு கொண்டிருக்கும் பயோசிப்பின் வேலையும் முடக்கமடையும். அவர் வருகை நாளன்றே பயோசிப்பின் ஆட்சியும் அழியும் என்பதை வேத வசனங்களின் மூலம் தெரிந்து கொண்டு எச்சரிக்கையாய் ஒவ்வொரு தேவப்பிள்ளையும் அவர் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்.

7) பயோசிப் காலத்தில் ஒரு தேவப்பிள்ளை வாழ வேண்டிய முறை

அன்பு சகோதர சகோதரிகளே, பயோசிப் காலம், உங்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன், முதலாவது நீங்கள் பயப்படவே கூடாது. பயோசிப்பை போட்டுக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாகவும், விசுவாசமாகவும் இருக்கவேண்டும். பயோசிப் அமுலுக்கு சட்டமாக வந்தபிறகு தேவபிள்ளைகளாகிய நீங்கள் உங்கள் குடும்ப செலவுகளை குறைத்துக் கொள்ளவேண்டும். ஆடம்பரமாக உணவு வகைகள் செய்யாமல் சிக்கனமாக சமைத்து சாப்பிடவேண்டும். குடும்பத்தில் திருமணம், பிறந்தநாள் இதுபோன்ற விழாக்களை நடத்தி கையில் உள்ள பணம் முழுவதையும் செலவு செய்யக்கூடாது. வெளியில் உறவினர்கள் அழைப்புகளுக்கு போய் மொய் வைக்கும் செலவு, புதியதாக துணிமணிகள் வாங்குவது போன்ற எந்தவொரு வீண் செலவும் செய்யக் கூடாது. புத்தியுள்ள 5 கன்னிகைகளைப் போன்று விழிப்பாய் வாழவேண்டும். நீங்கள் அப்படியிருந்தாலும் அந்நாட்களில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் (அல்லது) போலி இறைவாக்கினர்கள் தோன்றுவார்கள் என்று **மத்தேயு.24:11, மாற்கு.13:21-22ல்** சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது விசுவாசமாய் நாம் இந்த பயோசிப்பை பதியாமல் இருக்கவேண்டுமென்பதை குறித்து இயேசு கிறிஸ்துவானவர்

தாகமாயிருக்கிறார்.

நீங்கள் உறுதியாக பயோசிப் போட்டுக் கொள்ளாமல் இருந்தாலும் அற்புத அடையாளங்களை செய்து காட்டி, கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உங்களையும் நம்ப வைப்பார்கள். பைபிளில் பரிசுத்த ஆவியானவர் என்ற இன்னொரு முத்திரை உண்டு. **(வெளி 9:4, எபேசியர் 4:30)**

இந்த பரிசுத்த ஆவியானவரை கடவுள் முத்திரையாக நம் நெற்றியில் ஏற்கனவே ஞானஸ்நானம் எடுத்தவுடனே போட்டுவிட்டார். இந்த முத்திரையை பயோசிப்பாகிய '666' உடன் இணைத்து மாற்றிப் பேசுவார்கள். **மேலும் ரோமர். 13:1-2, 1.பேதுரு 2:13-14** வசனங்களின் படி அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் கீழ்படிய வேண்டும் என்று சொல்லுவார்கள். இந்த வசனத்தை நம்பி மோசம் போக வைத்து விடுவார்கள். **ரோமர் 13:3 வசனமும், 1.பேதுரு 2:15**வது வசனமும் நன்மை செய்யவேண்டும், அதாவது கடவுளுடைய கட்டளைகளை மட்டும் கடைபிடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நன்மை என்பது என்ன என்று அறிய **மத்தேயு 19:16-19** வரை படித்து பாருங்கள்.

மத்தேயு 4ஆம் அதிகாரத்தில் இயேசுவும் இந்த பூமியில் வாழும் போது பிசாசினால் சோதிக்கப்பட்டு இருக்கிறார். வசனத்தைக் கொண்டே ஆண்டவரிடம் பிசாசு பேசி இருக்கிறான். நம் ஆண்டவரும் பிதா தந்த வசனத்தின் மூலமே பிசாசை ஜெயித்தார். அது போலவே கள்ள போதகர்கள் எளிதாக ஊழியர்களிடத்திலும், சபைகளுக்குள்ளும் எளிதாக நுழைந்து வசனத்தின் மூலமாக மாறுதலான அர்த்தத்தில் பயோசிப்பை போடச் சொன்னால் போட்டுக் கொள்ளவே கூடாது. கள்ளத்

தீர்க்கதரிசிகள் யார் என்பது, விசுவாசியாகிய சிலருக்கு கண்டுபிடிப்பது எப்படியென்று யோசித்துக் கொண்டிருப்பீர்கள். எளிதாக கண்டு கொள்ளுங்கள். கடவுள் கொடுக்கப்பட்ட இக்கட்டளையை மாற்றி, உலகத்திற்கு ஏற்றபடி வாழவேண்டும் என்று தவறாக போதிப்பார்கள். இந்த கட்டளையை மீறினால் நமக்கு அக்னி கடல் என்று சொல்லப்பட்டிருந்தும் ஊழியத்திற்கும் இவ்வுலகத்திற்கும் சாதமாக பேசும் தீர்க்கதரிசிகளே கள்ளத் தீர்க்கதரிசிகளாவார்கள். எனவே ஜாக்கிரதையாக இருங்கள். இதற்கு பிறகு இந்த கட்டளையே கடைசி காலத்தில் வாழும் நமக்கு இறுதி கட்டளையாகும்.

இயற்கைக்கு வரும் கடைசி அடையாளம் **மாற்கு. 13:22-24ல்** காணலாம். இந்த அடையாளத்திற்கு பிறகு சூரியன் இருண்டு விடும், சந்திரனும் வெளிச்சம் கொடுக்காது, நட்சத்திரங்கள் விழும். இந்த அடையாளங்களை பூமியில் உள்ள அனைத்து மக்களும் காண்பதற்கு 2 நாட்களாவது ஆகும். ஏனென்றால் ஒரு பகுதி பகலென்றால் மறுபகுதி இரவாகும். அதைப் போலவே ஒரு பகுதி காலை என்றால் மறுபகுதி மாலையாக இருக்கும். இயற்கைக்குரிய அடையாளங்களும் பூமியில் நடக்கும் போது மனிதர்கள் அனைவரும் **லூக்கா 21:25-28** வரையில் உள்ளபடி, உலகத்திற்கு என்ன நடக்குமோ என்று பயந்து எதிர்பார்த்து இருப்பார்கள். அப்போது வானத்தின் சத்துவங்களாகிய வான்வெளிக் கோள்கள் அதிரும், மேகங்கள் மீது இயேசு கிறிஸ்து வருவார். இந்நிலையில் ஆண்டவரின் பிள்ளைகள் உயிரோடு **மத். 24:31-41** வசனத்தின்படி எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

இறைவன் மீது நம்பிக்கையாய் இருக்கும் ஒரு தேவப்பிள்ளை, உயர்படிப்பு, உயர் வேலைகளை இழந்தாலும் பரவாயில்லை என்று தைரியமாக இருக்கவேண்டும். உபத்திரவ காலத்தில், தேவபிள்ளைகள் முறுமுறுத்துக் கொண்டும், புலம்பிக்கொண்டும் இருக்கக் கூடாது. வசதியான வாழ்க்கை போய்விட்டதே என்று நினைக்காமல் நம் இயேசுவானவர் பசும்பொன்னும், வைரமும், வைடூரியமும் நிறைந்த பரலோகத்தை விட்டு விட்டு இப்பூமியில் சத்திரத்தில் வந்து நமக்காகவே பிறந்தார் அல்லவா ? அதைப் போலவே

பரலோகத்தை விட்டு பூமிக்கு இறங்கி வந்த நம் இயேசுவை அந்நாட்களில் நினைத்துக் கொள்ளவேண்டும். நாம் பரலோக ராஜ்யத்திற்கு போக வேண்டுமென்றால், செல்வராய் இருக்கும் நிலையில் நம்மை தாழ்த்தி வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். எதையும் இழக்கவும் அதாவது முத்திரையாகிய பயோசிப்பை போட்டுக் கொள்ளச் சொல்லும் நம் உறவினர்களையும் நம்மை கொலையே செய்வோம் என்று சொன்னாலும், பரவாயில்லை என்று நம் உயிரையும் கூட இழக்க தயாராக வேண்டும் என்று **லூக்கா 18:23-30, லூக்கா 14:26** என்ற வசனங்கள் சொல்கிறது. பயோசிப்பின் ஆட்சிக்காலம் வெகுவிரைவில் வரப்போகிறது. இதை நாம் கடவுளுக்காக போட்டுக் கொள்ளாமல் எப்படி வைராக்கியமாய் வாழ வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் இப்போதே தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். இப்படி தீர்மானம் எடுக்கவில்லையென்றால் பயோசிப் வரும் காலத்தில் இதற்குரிய பயம் ஒரு கண்ணியைப் போல் அந்நாட்களில் உங்களைப் பற்றிக் கொள்ளும் என்று லூக்கா 21:35 சொல்கிறது. அப்போது அவர்கள் போடும் வலையில் விழுந்து விடுவீர்கள். எனவே எச்சரிக்கையாய் இருங்கள்.

கள்ள போதகர்கள் என்று சொல்லும் போலி இறைவாக்கினர் சொன்னாலும் அதைப் போடவே கூடாது. **வெளிப்பாடு 19:20.** அப்படி மீறி போட்டுக் கொண்டால் அவர்களையும், பயோசிப்பை போதித்த போதகர்களாகிய கள்ளத் தீர்க்கதரிசிகளையும் உயிரோடு கடைசி நாளில் பிடித்து நெருப்பும் கந்தகமும் எரிகிற கடலில் போட்டு விடுவார்கள். எனவே பயோசிப்பை மட்டும் போட்டுக் கொள்ளவே வேண்டாம். அதை போட்டுக் கொண்டவருக்கு வான்வெளியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் செயற்கைகோளுடன் இணைப்பு கொடுத்துவிடுவார்கள் வெயிலின் தாக்கம் (வெப்பம்) நாளுக்கு நாள் நம் உடலின் உறுப்புகளை செயல் இழக்க வைக்கும். பல நோய்கள் வந்து நாம் சீக்கிரத்தில் மரணத்தை சந்திக்க நேரிடும். பயோசிப் போட்டுக் கொள்ளக் கூடாதென்பது கடவுளின் கட்டளை. இதையும் மீறி பயோசிப்பை பதித்துக் கொண்டால் தற்கொலை மரணத்திற்கு உங்களை நீங்களே ஒப்புக் கொடுக்கிறீர்கள் என்று அர்த்தம். தானாக சாகும் சாவை தேவன்

விரும்பமாட்டார் என்று **எசேக்கியேல். 18:31-32** சொல்கிறது. நீங்கள் தேவபிள்ளையாய் இருக்கிறபடியால் இந்த புத்தகம் உங்கள் கையில் கிடைத்து உள்ளது. எனவே நீங்கள் பரலோகம் போக வேண்டுமென்றால் பயோசிப் போட்டுக் கொள்ளக் கூடாது என்ற கட்டளைக்கு கட்டாயம் கீழ்படியவேண்டும். இப்படியாக பயோசிப் காலத்தில் ஒவ்வொரு தேவப்பிள்ளையும் எச்சரிக்கையாய் வாழவேண்டும்.

8] மணவாளன் வருகையில் செல்ல விரும்பும் மணவாட்டியே, ஆயத்தப்பட்டுவிட்டாயா ?

இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளையே மணவாளன் என்பது நம் இயேசு கிறிஸ்து. மணவாட்டி என்பது சபை. இந்த சபை என்பது யாரைக் குறிக்கிறது. இரட்சிக்கப்பட்ட ஜனங்களின் கூடுகையே சபை ஆகும். **அப்போஸ்தலர். 2:47 இரட்சிக்கபடுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.** இந்த வசனத்தை பாருங்கள் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் யார் என்றால் இயேசு கிறிஸ்துவை பற்றி கேள்விபட்டு அவரை ஏற்றுக் கொண்டு விசுவாசித்து சபைக்கு வந்து திருமுழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் தான் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று **மாற்கு. 13:15,16** சொல்கிறது. இப்படி இரட்சிக்கப்பட்ட நாம் சபைக்கு வருவதற்கு முன்பாக உலகத்தில் இருந்தோம். அப்போது நம்மை தேடி வந்த தேவபிள்ளைகள் மூலம் சுவிஷேசத்தை கேட்டோம். நாம் கேட்ட சுவிசேஷத்தை நினைவுகூர்ந்து பாருங்கள். இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருடைய பாவங்களையும் போக்குவதற்காகவே இவ்வுலகில் பிறந்தார் என்பதை பற்றியும் இயேசு கிறிஸ்துவே நம் தேவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற வல்லமையுள்ளவர். நமக்காக அவருடைய ஜீவனை கல்வாரி சிலுவையில் கொடுத்தார். இப்போதும் இயேசு சுவாமி உயிரோடு இருக்கிறார். கடவுள் ஆவியானவர் உருவில் தேவபிள்ளைகளாகிய, இரட்சிக்கப்பட்ட அனைவருடன் இருப்பார் என்பதை கேட்டோம் அல்லவா ? அது தான் சுவிஷேசம். இதற்கு பிறகு ஞானஸ்நானம் எடுத்து சபைக்கு வந்து விட்டோம். சபைக்கு வந்த பிறகு இன்னும் சுவிஷேச வசனங்களை பற்றியே

கேட்டுக் கொண்டு ஆராதனை முடித்து சென்றால், இந்த உலக ஆசீர்வாதம் மட்டுமே கிடைக்கும். சபையில் இராஜ்யத்திற்குரிய சுவிஷேஷத்தை கற்றுக் கொள்ளவேண்டும். அதற்கு மட்டும் தான் சபை. இப்படிப்பட்ட சபைக்காகவே நம் இயேசு கிறிஸ்துவும் தம் இரத்தம் முழுவதையும் கிரயம் ஆக்கினார். அது என்ன இராஜ்யத்திற்குரிய சுவிஷேசம் என்று யோசிக்கிறீர்களா? சரி பைபிளில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் எந்தெந்த இடத்தில் இப்படி வாழ்ந்தால் தான் பரலோகம் போக முடியும் ? குறிப்பாக, **யோவான் 3:3-5**ல் பரலோகத்திற்கு போகும் ஒரு வழி சொல்லப்பட்டுள்ளது.

சோதனைக் காலத்தில் தப்புவிக்க தேவபக்தி உள்ளவனாய் **யாக்கோபு 1:26, 27**ன் படி வாழச் சொல்லியிருக்கிறார். **1கொரிந்தியர் 6:9,10** அநியாயக்காரனாய் வாழாதே ; பரலோக இராஜ்யத்திற்கு போக முடியாது. **எபேசியர் 5:5, வெளிப்பாடு 21:8**ல் உள்ளவர்கள் பரலோகத்திற்குள் போக முடியாதவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி குறிப்பாய் புதிய ஏற்பாடு முழுவதும் படித்து எந்த அதிகாரங்களில் பரலோக ராஜ்யத்திற்குரிய செய்திகள் (அதாவது) வசனங்களை தேடி எடுத்து வலியுறுத்தி அடிக்கடி போதிக்கவேண்டும். நாமும் ஊழியராக இருந்தாலும் கட்டாயம் இக்கட்டளைகளை கடைப்பிடித்தே ஆகவேண்டும். கட்டளைகளை குறித்து சொல்லப்படும் சுவிஷேசமே இராஜ்யத்திற்குரிய சுவிசேஷமாகும். இயேசு கிறிஸ்துவும் உயிரோடு எழுந்து 40ஆம் நாள் பரலோகம் செல்வதற்கு முன்பாக சீஷர்களிடம், நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும், ஞானஸ்நானம் எடுத்த சீடர்களிடத்தில் இராஜ்யத்திற்குரிய இரகசியத்தை பற்றியே தெளிவாக பேசியுள்ளார். **அப்போஸ்தலர். 1:3.** பரலோக இராஜ்யத்திற்குரிய கட்டளைகள் பற்றிய வேத வசனங்கள் இராஜ்யத்திற்குரிய சுவிஷேசமாகும். எனவே சுவிசேஷம் இரகசிய வருகைக்கு முன்பு உலகமெங்கும் முந்தி அறிவிக்கப்படும். **மாற்கு13:10.** ஆனால் **மத் 24:14** இரகசிய வருகைக்கு பிறகு இராஜ்யத்திற்குரிய சுவிசேஷம் எது என்பது சாட்சியாக கற்றுக் கொள்வார்கள்.

இப்படியாக சுவிசேஷம் எது? இராஜ்யத்திற்குரிய சுவிசேஷசம் எது? என்பதை இந்நாட்களில் தேவ பிள்ளைகளாகிய நீங்கள் அறிந்து கொண்டு வாழ்ந்தால் தான் பரலோகம் செல்ல முடியும். மேலும் **சங்கீதம் 1:1-2**ன்படி இரவும், பகலும், இன்பத்திலும் துன்பத்திலும் நம் கடவுளின் சிந்தையோடு அவரால் கொடுக்கப்பட்ட கட்டளைகளின் படி வாழ்ந்து வரும் தேவபிள்ளையாகிய மணவாட்டியே இன்னும் உன்னை பரிசுத்தபடுத்து. உன் வீட்டுக் காரியங்களில் உள்ள கடன் பிரச்சனைகள், டி.வி.யில் எந்த ஒரு தொடரையும் பார்ப்பது போன்ற எந்தவொரு உலகப் பிரகாரமான காரியத்தோடும் தொடர்பு வேண்டாம். இப்படியாக பூமியில் வாழும் போதே பரலோக நினைவோடு வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். உங்களுக்குள் பழைய சுபாவங்கள் எரிச்சல், கோபம், மாமிச இச்சை, பொருள் ஆசை எதுவும் இல்லாமல் இருக்கிறீர்களா என்பதை சோதித்துப் பாருங்கள். உங்களால் முடியவில்லை என்றால் பிதாவிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என் சரீரத்திற்குள் மறைந்து கிரியை செய்யும், அத்தனை அசுத்த ஆவிகளையும் சுட்டெரியும் பிதாவே என்று அவர் கரத்தில் உங்களை ஒப்புக்கொடுங்கள்.

எனக்குள் மறைந்திருக்கும் எல்லா பாவங்களையும் காண்பித்து கொடுத்து என்னை சரிப்படுத்துங்க என்று ஜெபியுங்கள். அப்போது தான் இயேசுவாகிய மணவாளனோடு மணவாட்டியாகிய நாம் போக முடியும். குறிப்பாய் தேவ பிள்ளையாகிய உன் இருதயம் எந்த பாரமும், கவலையும், பயமுமில்லாமல் இலேசாக இருக்கவேண்டும். உன் மாமிச சரீரம் எத்தனை கிலோ இருந்தாலும் பஞ்சைப்போல் மாற்றுவார். ஆனால் உங்களுடைய இருதயம் பஞ்சைப் போலவும் சிறு பிள்ளையுடைய இருதயம் போலவும் இல்லாவிட்டால் உங்களால் பரலோக இராஜ்யத்திற்கு போக முடியாது. நம் இருதயத்தை தேவ பிள்ளையாகிய நாம் தான் மாற்றவேண்டும். **மாற்கு. 10:13-15, மத்தேயு 18:3 "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்** என்று சொல்லியிருக்கிறார்.

இப்போது ஒரு நிமிடம் சிந்தித்து பாருங்கள். உங்கள் இருதயம் பாரமில்லாமல் இருக்கிறதா ? பாரமில்லாமல் இருப்பீர்களானால் கட்டாயம் நீங்கள் மணவாளனுடன் பறந்து போய் பரலோக ராஜ்யம் போகலாம். அதற்கு முன்பாக மணவாட்டியாகி சபை விசுவாசியே நீங்கள் இன்னும் ஒன்று செய்யவேண்டும் என்னென்ன கட்டளைகளை கடைப்பிடித்தீர்கள் அதை வேத வசன ஆதாரத்துடன் உங்கள் கைபட ஒரு புதிய டைரி (அல்லது) நோட்புக்கில் ராஜ்யத்திற்குரிய சுவிஷேசம் என்று தலைப்பு கொடுத்து எழுதுங்கள். அதில் உங்கள் போட்டோ, நீங்கள் போகும் சபை ஞானஸ்நானம் எந்த தேதியில் யாரிடம் எடுத்தீர்கள் என்பது ஞாபகம் இருந்தால் அதையும் எழுதுங்கள். நீங்கள் எப்படி தேவனோடு ஜெபித்தீர்கள் வேதவசனத்தை படித்து எப்படி எந்த வசனத்தின்படியெல்லாம் வாழ்ந்தீர்கள், என்பதை வேதவசன ஆதாரத்துடன் தெரிந்து கொள்ளப்பட்ட தேவபிள்ளை என்ற நிச்சயத்தோடு எழுதி வையுங்கள்.

ஒரு வேளை நீங்கள் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு நீங்கள் எழுதிவைத்த டைரியோ (அ) நோட்டோ கைவிடப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும். ராஜ்யத்திற்குரிய நியாயப்பிரமாண கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்ந்து வந்த தேவபிள்ளையே உன்னுடைய சாட்சியே உலகமெங்கும் பிரசிங்கப்படும். **மத்தேயு 24:14** சொல்கிறது. சாட்சி என்பது தேவனுடைய கரத்தில் நாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றி சொல்வதே சாட்சியாகும். அதுபோல ராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆத்துமாக்களின் சாட்சியை உலகமெங்கும் கைவிடப்பட்ட தேவப்பிள்ளைகள் நம்புவார்கள். எனவே மணவாளன் வருகையில் செல்லவிருக்கும் மணவாட்டியே, உன் சாட்சி புத்தகத்தை **ஏசாயா 26:9**-ன்படி எழுதி வையுங்கள். **"உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியை கற்றுக்கொள்வார்கள்"** இந்த இரகசியத்தை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார். நானும் முழு நம்பிக்கையுடன் என்னை என் ஆண்டவர் எடுத்துக் கொள்வார் என்று நிச்சயித்திருக்கிறேன். அப்போது என் சாட்சியை குறித்து என் குடும்பத்தாரோ மற்றும் சபையில் உள்ளவர்களோ முழுமையாக

சொல்லமுடியாது. நான் எப்படி எந்த வேத வசனத்தை கைக்கொண்டு வாழ்ந்து வந்தேன் என்பது எனக்கும் என் மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டும் தான் தெரியும்.

எனவே விசுவாசமாய் சாட்சி புத்தகம் எழுத தொடங்கிவிட்டேன். தெரிந்து கொள்ளப்பட்ட தேவபிள்ளைகளே நாம் பயோசிப்பாகிய முத்திரையின் இலக்கத்தை போட்டுக் கொள்ளாமல் எப்படியாவது விசுவாசத்தோடு ஜெயங்கொண்டுவிட்டால், வெள்ளை அங்கியோடு இரகசிய வருகையில் பரலோகம் போவோம். அங்கு ஆட்டுகுட்டியான வராகிய இயேசு கிறிஸ்துவே நம்மை வழிநடத்துவார். ஜீவ தண்ணீரை கொடுப்பார். நம் கண்ணீர் யாவையும் துடைப்பார். அதாவது ஆண்டவரை பார்த்தவுடன் ஆனந்த கண்ணீர் வருமல்லவா ? அதைக்கூட வரவிடாமல் நம்மை தேற்றுவார். **வெளி. 7:9-17** என்று சொல்கிறது. பரலோகத்தில் அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் இருக்கும், அதாவது பொன்னிறமான கடல் அருகே போவோம். அங்கே மோசேயின் பாட்டு, இயேசுவின் பாடல்களையும் பாடுவோம்.

பரலோகத்தில் கர்த்தரிடத்தில் பேசுவோம், நீர் சொன்னபடியே உம்முடைய நீதியை சரிக் கட்டி எங்களை கூட்டி வந்து பரலோகம் சேர்த்தீர், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்று அவரிடத்தில் உறவாடிக் கொண்டிருப்போம். அதற்கு பிறகு பரலோகத்தில் சாட்சியின் கூடாராமாகிய ஆலயம் திறக்கப்படும் **வெளி 15:2-8**.அப்போது தான் பூமியில் வாழ்கிற கைவிடப்பட்ட தேவபிள்ளைகள் சபைகளுக்கு ஓடிவருவார்கள். எடுத்துக் கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளுடைய சாட்சியை தேடுவார்கள். பரலோகத்தில் சாட்சியின் கூடாராமாகிய ஆலயம் திறக்கப்பட்டவுடன் கைவிடப்பட்ட தேவபிள்ளைகளுக்கு சாட்சி புத்தகமோ செய்தியோ ஆதாரத்துடன் கிடைத்துவிடும். எனவே மணவாளன் வருகையில் செல்ல இருக்கும் மணவாட்டியே மறக்காமல் உங்கள் சாட்சியை எழுதி வைத்து விடுங்கள். மேலும் மற்ற குடும்ப காரியங்களையும் தீவிரமாய் சரிபடுத்துங்கள் அல்லது குடும்ப உறவினர்களிடம் ஒப்படைத்துவிடுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார் -2 **இராஜா 20:1**. எடுத்துக்

கொள்ளப்படும் நாமும் இந்த வசனத்தின்படி செயல்படவேண்டும்.

9] வருகைக்கு பிறகு கைவிடப்பட்ட தேவப்பிள்ளைகள் ஆயத்தமாக வேண்டிய முறை

வருகையில் கைவிடப்பட்ட தேவப்பிள்ளைகளே ! ஆண்டவருடைய வருகை நடந்து முடிந்து விட்டது. நாம் மட்டும் எடுத்துக் கொள்ளப்படவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். முதலில் அவருடைய கட்டளைகளின் படி வாழ்ந்த பிள்ளைகளை தெரிந்து கொள்ளப்பட்ட லிஸ்டில், முன்கூட்டியே அவர்கள் பெயர்கள் இருந்ததால் **மத்தேயு 24:31ம்** வசனத்தின்படி அவர்கள் பரலோகம் போய்விட்டார்கள். இப்போது நீங்கள் செய்யவேண்டிய வேலை, உங்களுடைய பயம், திகில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நான் கட்வுளுடைய பிள்ளையாய் வாழ்ந்து வந்தேன், பயோசிப்பாகிய முத்திரையைக் கூட வலது கையிலாவது, நெற்றியிலாவது போடாமல் இருந்தேன், நகைகள் கூட அணியாமல் இருந்தேன். ஏன் என்னை கைவிட்டுவிட்டார். இயேசு கிறிஸ்து வருகையில் எடுத்துக் கொள்ளவில்லையே என்று நினைத்துக் கவலைப்படவேண்டாம். ஏதாவது ஒரு சில கட்டளைகளுக்கு கீழ்படியாமல் அல்லது அறியாமல் இருந்திருப்பீர்கள். ஆகவே சோர்ந்து போகாமல் ஒன்று செய்யுங்கள். உங்கள் பகுதியில் அல்லது பல சபைகளில், ஆண்டவரின் வருகை நடந்த நாளில் எந்தெந்த பிள்ளைகள் காணாமல் போனார்கள் என்பதை கண்டுபிடித்து அவர்களின் வீட்டிற்கு செல்லுங்கள்.

அவர்கள் என்னென்ன கட்டளைகளை கடைப்பிடித்தார்கள் தேவனிடத்தில் எப்படி ஜெபித்தார்கள் எப்படி ஊழியம் செய்தார்கள் என்பதை எடுத்துக் கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகள் தன் கைப்பட ஏதாவது டைரியில் அல்லது நோட்புக்கில் எழுதி வைத்திருப்பார்கள். **மத்தேயு 24:14** வசனத்தின்படி ராஜ்யத்திற்கு போனவர்கள் சாட்சிக்காக எழுதி வைத்து இருப்பார்கள். அதை வாங்கிப் படித்து நீங்களும் வாழ்ந்தீர்கள் என்றால் மீண்டும் ஒரு முறை பிதாவின் மகிமை பொருந்தியவராய் பரிசுத்தவான்களோடு உயிரோடு இருக்கும் உங்களையும் அழைத்து செல்ல பகிரங்கமாக வருவார். அதன்

பிறகே பூமி முழுவதும் அக்கினியால் அழியும். காண்க : **1 தெசலோனிக்கேயர் 4:13-18 2 பேதுரு 3:10-13; சகரியா. 14:5.** இந்த வசனங்களில் உலகத்தின் முடிவைப் பற்றியும் அவர் மீண்டும் வருவதைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நாம் கடவுளுக்காக இவ்வளவு நாட்கள் வாழ்ந்த வாழ்க்கையைக் காட்டிலும், இனி வாழப்போகும் நாட்கள் துன்பம் துயரங்கள் நிறைந்ததாக இருக்கும். வெயிலின் கொடுமை, பூமியதிர்ச்சிகள், சண்டைகள், கலகங்கள், கடல் கொந்தளிப்புகள், பஞ்சங்கள், கொலைகள், விபச்சார பாவங்கள் இன்னும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். எப்படியெனில் தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்களை 7தூதர்கள் கரங்களில் வைத்திருப்பார்கள். பிறகு ஒவ்வொரு தூதராக ஒன்றன் பின் ஒன்றாக தேவன் ஆணையிட தன் கையில் உள்ள நெருப்புக் கலந்த கோபாக்கினை கலச்சத்தை பூமியின் மேல் கொட்டுவார்கள். அப்போது, தேவனுடைய கோபம், பூமியில் இறங்கும். உடனே **வெளிப்பாடு 8ல்** உள்ள அத்தனை வாதைகளும் பூமியில் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும். ஆனாலும், தேவப்பிள்ளைகளே, பயப்படவேண்டாம். தானியேலைப் போல தைரியமாக இருங்கள். **தானியேல் 3,6**ஆம் அதிகாரத்தைப் படித்து பாருங்கள். எத்தனை உபத்திரவங்கள் இப்பூமிக்கு வந்தாலும் தேவனுடைய கரம் கைவிடப்பட்ட தேவபிள்ளைகளைக் காக்கும். **யோவேல் 3:16** என்ற வாக்குதத்த வசனத்தின் மேல் நம்பிக்கையாய் இருங்கள்.

எனவே உபத்திரவ காலங்களில் தேவனுடைய கட்டளைகளை நீங்கள் வைராக்கியமாக கடைபிடிக்கவேண்டும். கடவுளின் அன்பை விட்டு விலகிவிடவே கூடாது. முடிவு பரியந்தம் நிலைத்து நிற்பவனே இரட்சிக்கப் படுவான் என்று வசனம் சொல்கிறது. இயேசுவும் நமக்காக பரலோகத்திற்கு சென்ற பிறகு பரிசுத்த ஆவியானவரை பூமிக்கு அனுப்பி இருக்கிறார். அந்த பரிசுத்த ஆவியானவரை நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றால் **மத்தேயு 3:13-17** யும், **யோவான் 3:3-5** யும், **1 பேதுரு 3:20-21ன்** படியும், கடவுளோடு உடன்படிக்கை செய்து திருமுழுக்கு எடுக்கவேண்டும். **லூக்கா**

14:23 ; யோவான். 8:51 ; யோவான் 15:35 ; 15:8 இவற்றின்படி கட்டாயம் கைவிடப்பட்ட பிள்ளைகளாகிய நீங்கள் வாழவேண்டும்.

பின்பு நாள்தோறும் அதிகாலையில் எழுந்து ஜெபம் செய்யவேண்டும். வேதம் (பைபிள்) வாசிக்கவேண்டும். குறிப்பாய் வேதத்தில் 1 கொரி 6:9-10, எபேசியர் 5:5, வெளிப்பாடு 21:8, வெளி. 21:27ன்படி கட்டாயம் நீங்கள் வாழவே கூடாது. இதிலுள்ள வசனங்கள் எதைக் குறிக்கிறது என்றால் நாம் கட்டாயம் நியாயப் பிரமாண கட்டளைகளை கடைபிடித்தே ஆகவேண்டும். அப்பொழுது தான் நாம் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள முடியும் என்று லூக்கா 18:18-20 சொல்கிறது. மத்தேயு 5:17ல் இயேசு கிறிஸ்து நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தார். ரோமர் 7:1,12லும் பவுல் சொல்லியிருக்கிறார் நாம் உயிர் உள்ள நாள் வரை நியாயப் பிரமாண கட்டளைகளை கடைபிடித்தே ஆகவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். மேலே சொல்லப்பட்ட வசனத்தின்படி நற்கருணை எடுத்து யோவான் 6:53-55 வரை உள்ள வசனத்தின்படி மாதம் ஒரு முறையாவது திருவிருந்து எடுக்கவேண்டும். மத்தேயு 25:33-37, எசேக்கியேல் 18:5-9ன்படி நீதிமான்களாய் வாழ்ந்து வரவேண்டும். இயேசு கிறிஸ்துவும் அவர் கட்டளையிட்டவைகளையும் கைக்கொண்டு வாழ்ந்து வருகிற பிள்ளைகளுடன் உலக முடிவுவரை அவர் கூடவே இருப்பதாக சொல்லியிருக்கிறார். (மத்தேயு 28:18-20 "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார்) எனவே கைவிடப்பட்ட தேவபிள்ளைகளே பயப்படவேண்டாம்." பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழி நடத்துவார்.

11] ஆசிரியரின் இறுதி உரையும் ஜெபமும்

தேவபிள்ளைகளே, இயேசுவின் வருகைக்கு முன்பாக மிருகத்தின் முத்திரை வரும். அதற்கு அடையாளமாக எல்லா அலுவலகங்களிலும், பள்ளி கல்லூரிகளிலும், ஒவ்வொருடைய கைவிரல் ரேகைகளை பதிந்து பயோ மெட்ரிக் முறை இப்போது

ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. முதலில் எழுதிய புத்தகத்தைவிட இன்னும் தெளிவாகவும், ஆழமான கருத்தோடும் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. எனவே பயோசிப்பை தேவப்பிள்ளைகள் போடவே கூடாது. அப்போது தான் தேவன் உங்களை காப்பார் என்று **வெளிப்பாடு.17:14** வசனம் சொல்கிறது. இந்த கட்டளையை வலுயுறுத்தி சொல்லவே உங்கள் சகோதரியாக நானும், அன்புச் சகோதரர் **எஸ்.தாயப்பன்** அவர்களும் மிகவும் சிரமப்பட்டு இப்புத்தகத்தை வெளியிட்டுள்ளோம்.

பயோசிப் குறித்து, ஆக்கப்பூர்வமான அறிவிப்பு ஏதாகிலும் வெளியாகும் பட்சத்தில் இப்புத்தகத்தின் விநியோகத்தை நாங்கள் நிறுத்திவிடுவோம். அதற்கு பிறகு இப்புத்தகம் உங்கள் கரங்களுக்கு கிடைக்காது. ஏனென்றால் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முத்திரைக் காலத்திற்கு முன்பு ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்ட மக்கள் மட்டும் அந்நாட்களில் காக்கப்படுவார்கள். மற்றவர்கள் அந்த மிருகத்தை வணங்குவார்கள் என்று **வெளிப்பாடு. 13:8**ல் சொல்லியிருக்கிறார். அதீவரது பயோசிப் போட்டுக் கொள்வார்கள். எனவே, எச்சரிக்கை சத்தம் ஆண்டவர் வருகைக்கு முன்பே உங்களுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. **பிரசங்கி 3:1**லும் ஒவ்வொன்றிற்க்கும் ஒரு காலம் உண்டு என்பதை அறிந்து ஒவ்வொரு தேவப் பிள்ளையும் ஞானமாய் நடக்கவேண்டும். இதற்கு மீறி செயல்படுகிறவர்கள் தான் பல உபத்திரவத்திற்கு ஆளாவார்கள்.

இன்னும் ஒரு இரகசியம் அடங்கிய எச்சரிக்கை வசனத்தை நம் தேவன் ஆவியானவர் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார். பூமியில் மாநகரமாய் இருந்து அனைத்து நாடுகளையும் ஆளுகை செய்யும் அந்த கண்டத்தைவிட்டு என் தேவஜனம் வெளியே வரவேண்டும் என்று, **வெளிப்பாடு 17:18, வெளிப்பாடு 18:4** வசனங்களில் சொல்லியிருக்கிறார். ஏன் அந்த மாநகரத்தைவிட்டு வெளிவரவேண்டுமென்றால் அம் மாநகரில் பயோசிப் கட்டாயம், வற்புறுத்தி பதியவைத்து பாவத்திற்கு உட்படுத்திவிடுவார்கள். அவர்களால், அநேக தீர்க்கதரிசிகளும், பரிசுத்தவான்களும், தேவபிள்ளைகளும், இரத்த சாட்சியாய்

மரிக்கவேண்டும் என்று வெளிப்பாடு **18:24ல்** சொல்லியிருக்கிறது. அந்த மாநகரத்தில் தான் பயோசிப் முதன் முதலில் சட்டமாக வெளிவரும். எனவே தேவபிள்ளைகளே, தேவனுடைய வசனத்திற்கு கீழ்படியுங்கள். அந்த மாநகரத்தைவிட்டு வெளியே வாருங்கள். இயேசு கிறிஸ்துவும் காலத்திற்கு ஏற்றபடி சில இடங்களில் மட்டும் இராஜ்யத்திற்கு உரியவைகளை தெளிவாக பேசியுள்ளார். ஒரு சில இடங்களில் மறைமுகமாக உவமைகள் மூலமாக மட்டுமே பேசினார். அதுபோல நாமும், காலத்திற்கேற்றபடி தெளிந்த புத்தியுள்ளவர்களாய் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எதையெல்லாம் விட்டுக் கொடுக்க முடியுமோ அதையெல்லாம் விட்டுக் கொடுக்கவேண்டும். முத்திரை நாட்களில் சிறைச்சாலையில் உங்களை அடைப்பேன் என்று சொன்னாலும் கவலைப்படவேண்டாம்.

உங்களுடன் ஆவியான தேவனும் வருவார் என்று **(லூக்கா 21:12-15ல்** முன்கூட்டியே நம் ஆண்டவர் சொல்லி விட்டார்). இறுதிநாளில் வாழும் நாம் அதிகமான நேரமெடுத்து ஜெபம் செய்வதிலும், வேதம் வாசிப்பதிலும், கவனமாய் இருக்கவேண்டும். எப்பொழுதும் ஸ்தோத்திரத்துடன் இருக்கவேண்டும். உங்களுக்கு என்ன சந்தேகம் வந்தாலும், வேதத்தை பலமுறை படிப்பதன் மூலம் ஆவியானவரே உங்களுக்கு பதில் தருவார். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அநேக போதகர்கள், அவர்களுடைய ஊழியத்தின்படி உங்களை நடத்திவிடுவார்கள். எனவே ஜாக்கிரதையாய் இருங்கள். எப்படியெனில் வேதமே சொல்கிறது **எபேசியர் 4:14-15ஐ** படித்துப் பாருங்கள் **நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார்.** இந்த வசனத்தின் மூலம் வஞ்சிக்கிறதக்கு ஏதுவான போதகங்கள் உண்டு என்பது தெளிவாகிறது. இதை நாம் அறிந்து

கொள்ளவேண்டுமென்றால் அன்புடன் சத்தியத்தை கைக்கொள்ளவேண்டும். இதில் அன்பு என்பது தேவனுடைய கற்பனையை கைக் கொள்வதே என்று **1 யோவான்.5:3** சொல்கிறது. அதே போல் சத்தியம் எது என்பது **மாற்கு12:28-32** சொல்கிறது. பிதாவின்னால் கொடுக்கப்பட்ட கற்பனைகளும் நியாயப் பிரமாணங்கள் ஆகும். எந்த சூழ்நிலையில் நீங்கள் வாழ்ந்தாலும் பரலோகம் செல்லவேண்டுமென்றால், கட்டளைகளையும், கற்பனைகளையும் கடைபிடித்தால் தான் செல்லமுடியும் என்பதை **வெளிப்பாடு 22:14** தீர்மானமாக சொல்கிறது. இத்தனை எச்சரிக்கை வசனங்களை படித்தப்பிறகும் எந்த ஒரு தேவப் பிள்ளையாவது தன் இருதயத்தை சமாதானப்படுத்திக் கொண்டு என் குடும்ப சூழ்நிலை என் தேவனுக்கு தெரியும். என் கணவன் பற்றியும் என் பிள்ளைகள் பற்றியும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். எனவே நான் பயோசிப் போட்டாலும் என்னை என் இயேசு அப்பா மன்னிப்பார் என்று உங்களையே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். சத்தியத்தை அறிந்த பிறகு மனப்பூர்வமாய் நீங்கள் பாவம் செய்தால் உங்களை மீட்டெடுக்க முடியவே முடியாது. **எபிரேயர் 11:26** சொல்கிறது.

இப்புத்தகத்தை முடிந்தவரை அவருடைய வருகைக்கு முன்பே வாங்கி இதிலுள்ள தேவ இரகசியத்தை படித்து உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆயத்தப்படுத்துங்கள். முடிந்தால் மற்ற விசுவாசப் பிள்ளைகளுக்கும் வாங்கிக் கொடுங்கள். ஒரு வேளை ஊழியக்காரராக இருப்பீர்களானால் உங்களுடன் இணைந்து ஊழியம் செய்யும் அனைத்து தேவப் பிள்ளைகளுக்கும், இப்புத்தகத்தை வாங்கிக் கொடுங்கள். அப்போது அநேக ஆத்துமாக்கள், பரலோகம் செல்ல உதவியாய் இருக்கும். இப்படி செய்தால் கர்த்தாதி கர்த்தரும், இராஜாதி இராஜாவுமாய் இருக்கிற நம் இயேசு கிறிஸ்துவானவர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

[illegible] இந்த [illegible] நாம் கர்த்தரை அறிந்து [illegible] நாம் வளர வேண்டும். (2 பேதுரு 3 : 18) [illegible] கர்த்தருடைய [illegible] வசனங்கள், எச்சரிக்கை வசனங்கள், வாக்குத்தத்த வசனங்கள் என்ன சொல்கிறது என்பதை தியானிக்க வேண்டும். குறிப்பாக இந்த புத்தகத்தில் இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகை காலத்தில் நடக்கும் இறுதி அடையாளம் [illegible] மத்தேயு 24 : 30 தெளிவாக சொல்கிறது. இதையே மாற்கு 13 : 24 - 26 ல் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. இன்னும் தெளிவாக [illegible] ஆண்டவர் வருகை காலத்தில் [illegible] இடங்களில் நடக்கும். நீங்கள் [illegible] முத்திரை போட்டுக்கொள்ளும்படியான [illegible] கொடுப்பார்கள். உங்களுக்கும் [illegible] நெருக்கடி வரும்போது, கள்ள போதகர்கள் [illegible] முத்திரை போட்டுக் கொள்ளவேண்டி வரும். [illegible] என்ன அடையாள அற்புதங்கள் அக்கூட்டங்களில் நடந்தாலும் போகவே வேண்டாம்.

மேலும் அதற்கேற்றபடியாக ஆண்டவரின் வருகைக்கு இறுதியான உபத்திரவம் சூரியன், சந்திரன் இரண்டுமே இரவு பகல் எந்த நேரத்திலும் வெளிச்சம் இல்லாமல் இருளாகவே இருக்கும். கர்த்தருடைய நாளுக்கு முன்பாக அப்போஸ்தலர் 2 : 20ல் சொல்லப்பட்ட படியும், மேற்கண்ட வசனங்களின்படியும் சூரியன் அந்தகாரப்படும், சந்திரனாகிய நிலவும் வெளிச்சம் கொடுக்காது. அப்படியாக உலகம் முழுவதும் காரிருள் சூழ ஆரம்பிக்கும். உடனே தேவபிள்ளைகள் முதலாவது அவரவர்கள் குடும்பம் ஒன்றாக கூட வேண்டும். ஒரு மாத கால அளவிற்கு தேவையான உணவு வகைகள் முக்கியமான கோதுமை மாவு, ரவை, அரிசி, எண்ணெய், பருப்பு வகைகள், சோப்புகள் வாங்கி எப்படி பதப்படுத்த முடியுமோ வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். குறிப்பாக மளிகை செலவுகள் என்றும் வாங்குவதைப்போல இரண்டு மூன்று மடங்கு [illegible] வாங்கி

வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் உலகமெங்கும் காரிருள் சூழ ஆரம்பித்த பிறகு எல்லா வாகனங்களின் போக்குவரத்துக்களும் தடைப்படும். அப்போது விலைவாசி ஒரு பக்கம் அதிகமாகிவிடும்.

உதாரணமாக உத்தரகாண்ட் மாநிலத்தில் மழை வெள்ளம் வந்த பிறகு ஒரு சப்பாத்தி 100 ரூபாய் விற்கப்பட்டது. ஓர் இடத்தில் நடந்த சம்பவத்திற்கே இந்த கதி என்றால் உலகம் முழுவதும் பெரிய பெரிய பேரிழப்புகள் நடக்கும். நாம் ஆண்டவர் வருகையில் சென்றாலும், நம் வீட்டில் உள்ள கைவிடப்பட்ட பிள்ளைகள் இருப்பார்கள். அவர்களுக்கு உணவு சமைத்து சாப்பிடும்படி தேவையானதை சேமித்து வைக்க வேண்டும். அப்போது அந்த பிள்ளைகள் பசியில்லாமல் ஒரு வேளையாவது சிக்கனமாக வீட்டில் இருப்பதை சாப்பிடுவார்கள். வசனம் சொல்கிறது சங்கீதம் 33 : 18 - 19ல் பஞ்சக் காலத்திலும் அவர்களை உயிரோடு காப்பேன் என்று சொல்லப்பட்டபடியும், சங் 37 : 25 நீதிமான்களின் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதை நான் காணவில்லை என்று வசனம் சொல்கிறது. அப்படியென்றால் புத்தியுள்ள ஸ்திரியைப் போல் நாம்தான் நம் குடும்பத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், வெளிச்சத்துக்கு அதிக அளவில் மெழுகுவர்த்திகள் வாங்கி வைக்க வேண்டும். தண்ணீர் சேமித்து வைக்க வேண்டும். இப்படியாக ஆண்டவர் வருகைக்கு பிறகு ஒரு மாத காலம் அளவு பூமியில் அநேக இடங்கள் சேதப்பட்டு இருக்கும். எனவே எந்த கடைகளும் திறக்கப்படாமல் இருக்கும். பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி என்று லாரிகள் வர வாய்ப்பு இருக்காது. இதையெல்லாம் தேவ பிள்ளைகள் ஞானமாய் அறிந்துகொள்ள வேண்டும். முத்திரை காலம்அறிவிப்பு கொடுத்தவுடன் அமைதலான முறையில் வீட்டுக்கு தேவையான (சமைக்க) ஒரு சில பொருட்களை வாங்கி வையுங்கள். மிகவும் எச்சரிக்கையாய் தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து பயந்து வாழ வேண்டும். தன் குடும்பத்திற்கு தேவையான சில முக்கியமான பொருட்களையும் சேமிக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது.

ஜெபம் செய்வோம் !

பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பரம பிதாவே ! உலகத்திலுள்ள தேவபிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் உமக்கு கோடி, கோடி நன்றி கூறுகிறோம். உம்முடைய கட்டளைகள் அடங்கிய இப்புத்தகம் எங்கள் கையில் கிடைக்க கிருபை கொடுத்தீரே உமக்கு நன்றி ! இந்த பயோசிப் காலத்தில் நாங்கள் அதை போட்டுக் கொள்ளாமல் இருக்க உம்முடைய பலத்தை தாரும். உபத்திரவ நாட்களில், பரலோகத்தில் உள்ள அத்தனை தூதர்களையும் பூமிக்கு அனுப்பி! உம்முடைய பிள்ளைகளாகிய எங்கள் அனைவரையும் பாதுகாத்துக் கொள்ளும். இயேசு சுவாமி, நீர் எங்களுக்காக யோவான்.17ஆம் அதிகாரம் முழுவதிலும் ஜெபித்த ஜெபம் இந்த முத்திரை காலத்தில் எங்களுக்கு நிறைவேறுவதாக ! பிதாவே உபத்திரவ நாட்களில் மலை போன்ற பிரச்சனைகள் வந்தாலும் அவைகளை பனிபோல கரையச் செய்யும். உம்முடைய மகன் பூமியில் வாழும் போது, எப்படி பரிசுத்தத்தை காத்துக் கொண்டாரோ அப்படியே நாங்களும் வாழ்வதற்கு உதவி செய்யும். உம்முடைய மகனின் வருகையில் எங்களை எடுத்துக் கொள்ளும். இயேசுவின் இன்ப நாமத்தில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறோம் ஜீவனுள்ள எங்கள் நல்ல பிதாவே ! ஆமென்!

இப்படிக்கு,

சகோதரி வி. மரியா [எ] மிரியாம்
ராஜ்யத்தினுடைய சுவிசேஷ ஊழியங்கள்
(எச்சரிப்பின் சத்தம்)
செல் : 9688748968
உங்கள் சகோதரன் எஸ். தாயப்பன்
சென்னை 600 073.
போன் : (044) 22234526

மனுஷகுமாரன் வல்லமையோடும்
மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல்
வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு
புலம்புவார்க்கள். மத்தேயு 24:30

என்ற வசனத்தின்படி இயேசுகிறிஸ்துவின்
வருகைக்கு மேகங்கள் கூட
பூமியை நோக்கி தரை இறங்க ஆயத்தமாகிவிட்டது.

தரை இறங்கும் மேகங்கள்

நாசா செயற்கைகோளில் இணைக்கப்பட்டு இருக்கும் ஆய்வுக்கருவிகளில் ஒன்று எம்.ஐ.சி.ஆர். (Multi Angle Imaging Spectro Radio Meter M.I.C.R.) எனப்படும் நவீனக் கருவியாகும். இந்தக்கருவி பூமியின் மேற்பரப்பில் உள்ள மேகங்களின் இயக்கங்களை படம்பிடித்து கண்காணித்தது. கடந்த 10 ஆண்டுகளில் மேகங்களின் இயக்கம் குறித்து இந்த கருவி சேகரித்த தகவல்களை நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்கள்.

அப்போது தான் மேகம் கொஞ்சம் கொஞ்சமாக பூமியை நோக்கி தரை இறங்கி வருவது தெரியவந்தது. இதுகுறித்து ஆய்வு நடத்திய பேராசிரியர் ரோஜர் டேவிஸ் கூறும்போது, 'கடந்த 10 ஆண்டுகளில் மேகம் சுமார் 30 முதல் 40 மீட்டர் வரை உயரம் குறைந்துள்ளது' என்றார்.

இதற்கு காரணம் என்ன? என்று கேட்ட போது, 'இப்போதைக்கு சரியான காரணம் எதையும் கண்டுபிடிக்கவில்லை. இருப்பினும் காற்றின் சுழற்சி மாற்றம் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்' என்று கருதுவதாக பேராசிரியர் ரோஜர் தெரிவித்தார்.

வான்வெளியில் மிதக்கும் மேகம் உயரம் குறைவதால் வானிலை மாற்றம் ஏற்படலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இது எந்த அளவுக்கு மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை இனி வரும் ஆய்வுகள் மூலமே கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

தினம் ஒரு தகவல்

எரிகற்கள் எப்படி வருகின்றன?

சூரிய காந்தப்புயல்

நான்காம் தூதன் தன்
கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல்
ஊற்றினான்;தீயினால் மனுஷரைத்
தகிக்கும்படி அதற்கு அதிகாரம்
கொடுக்கப்பட்டது
(வெளி 16:8)

என்ற வசனத்தின்படி சூரியனின்
தோற்றத்தைப் பாருங்கள்.





தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.

வெளி 14:9,10

"சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்படவேண்டும்" - மாற்கு 13:10

சகோ. வி.மரியா(எ)மிரியாம்

ராஜ்யத்தினுடைய சுவிசேஷ ஊழியங்கள்.

(எச்சரிப்பின் சத்தம்)

கைபேசி : 9688748968
9360555579